பொற்குவியல் ---- (பாண்டியன்.)

திராவிடநாடு

8–4–56 ★ வார வெளியீடு ★ விலை 2 அணு



★

நாவலர் நம் கழகக் காவலர்

★

கண்ணீர் பேசுகிறது

★

தீர்ந்துபோய் விட்டதாம்

★

விந்தையான தகவல் ஒன்றைச் சொல்லியிருக்கிறுர், டில்லி திட்ட மந்திரி குல்ஜாரிலால் நந்தா (பெயர்தான் இது. என்னமோ, ஏதோவென்று எண்ணிடாதீர்கள்!) எங்காவது ஓரிடத்தில் சமுதாய நலத் திட்டம் ஒன்று நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டுவிட்டதென்ருல் உடனே அந்த இடத்தில் ஒரு மதுபானக் கடையும் ஆரம்பமாகிவிடுகிறதாம். இத் தகவலை, அவர் டில்லி பார்லிமெண்டிலேயே வெளியிட்டிருக்கிறுர்; ஏப்ரல் முதல் தேதி.

*

பிப்ரவரி 18ந் தேதி (சர்வ கட்சி அணியின் அர்த்தாலுக்கு இரு தினங்களுக்கு முன்பு) மதுரைக்குப் போய் அங்குள்ள காங்கிரஸ் தொண்டர்களைக் கூட்டி வைத்து, அரசியல் நிலைமைகளை விவாதித்தாராம் அமைச்சர் பக்தவத்சலம்! அவர்தானே, நமது மாகாண சமுதாய நலத் திட்டங்களுக்கும் பொறுப்பாளி. காங்கிரஸ் காரர்களிடம் அவர் பேசியபோது சொன்ருராம், "வேலையில்லாமல் கஷ்டப்படும் காங்கிரஸ் காரர்களுக்கு, சமுதாய நலத்திட்ட அலுவல்களில் முதலிடம் தரப்படும்" என்பதாக, உண்மையுங்கூட அதுதான், என்கிருர்கள்! தேசீய அபிவிருத்தித் திட்டம் போன்ற இந்த சமூகத் திட்டங்களில், பெரும்பாலும், அவர்களுக்குத்தான் சந்தர்ப்பம் வழங்கப்படுகிறதாம்.

*

குல்ஜாரிலால் கூற்று, நமது மாகாணத்தைப் பொறுத்தது அல்ல. மதுவிலக்கு அமூல் நடக்காத வெளி மாகாணங்களைப் பொறுத்தது. என்ருலும் இவ்வளவு வெளிப்படையாக அவர் பேசியிருப்பது பல காங்கிரஸ் தலைவர்களின் மனதைப் புண்படச் செய்யும் என்றே நினைக்கிரேும். இப்படியா முடிச்சுப் போடுவது? சமூக நலத் திட்டங்கள் ஆரம்பிக்கிற இடத்திலெல்லாம் உடனே ஒரு மதுபானக் கடை தோன்றிவிடுகிறதாமே!!

*

மலேயாவில், அபினிக்கு தடை போடப்பட்டிருக்கிறது. யாரார் லைசென்ஸ் வாங்கியிருக்கிருர்களோ அவர்களுக்குத்தான் கொடுக்கப்படுமாம். இப்படி லைசென்ஸ் முறை வைத்திருப்பதால் நடக்கும் அட்டூழியங்களைத்தான் நம்மில் பலர் அறிவோமே! பெயருக்கு ஒரு லைசென்சும் ரேஷனுமே ஒழிய, வேண்டியளவுக்குத்தான் சரக்கு கிடைக்கிறதே. இதுபோல, மலேயாவிலும் ஏராளமான அபினி கள்ளத்தனமாகக் கிடைக்கிறது! இத் தொழிலை, மலேயா சர்க்கார் காடுகளில் வேட்டையாடிக்கொண்டிருக்கும் கிளர்ச்சிக்காரர்கள் வெகு திறமையாக நடத்துகிருர்களாம். அவர்களுக்கு கிளர்ச்சி நடத்த பணமே, இப்படி அபினி கள்ள வியாபாரத்தால்தான் கிடைக்கிறதாம்! இதை அறிந்த மலேயா முதலமைச்சர் துங்கு, இப்படி தடையிருப்பதால் தானே அவர்களால் கள்ள வியாபாரம்நடத்தி கொள்ளலாபமடித்து சர்க்காரையே எதிர்த்து கிளர்ச்சி நடத்த முடிகிறது. அபினிக்கு இருக்கும் தடையை நீக்கி திறந்த மார்க்கெட்டில் கிடைக்கும்படி செய்தால் கிளர்ச்சிக்காரர்கள் பணத்துக்குத் திண்டாட வேண்டி வருமல்லவா, என்பதாக யோசித்துக்கொண்டிருக்கிருராம்!

*

டில்லி சர்க்கார் குழு ஒன்றை நியமிக்க இருக்கிருர்களாம்! சம்ஸ்கிருதக் குழு! இது, நமது உபகண்டத்திலிருக்கும் பல்கலைக் கழகங்களிலெல்லாம் எப்படியெப்படி சமஸ்கிருதத்தைச் சொல்லிக்கொடுக்கச் செய்யலாம், அதற்கு அங்கங்கே உள்ள வசதிகள் என்ன என்பதையெல்லாம் ஆராயுமாம். அதோடு, தனிப்பட்ட முறையில் சங்கங்கள் சபைகள் மூலமாகவும் எப்படி அம்மொழியைப் பரப்பலாம் என்பது குறித்தும் இக்குழு பரிசீலனைசெய்யுமாம். மார்ச் 12ந் தேதி டில்லி பார்லிமெண்டில், கல்வி இலாகாவின் சார்பில் டாக்டர் மனமோகனதாஸ் என்பார் இதனை தெரிவித்துள்ளார்!

*

அடிக்கிறது யோகம், செத்த மொழியெனக் கருதப்படும் சமஸ்கிருதத்துக்குக்கூட, டில்லி சர்க்காரே. அரவணைப்புத் தருகிருர்கள். ஆனுல், நமது தமிழுக்கு.........? காமராஜ் அரசு ஒரு இலட்ச ரூபாய்க்கு மேல் கொட்டி இந்தியில் அல்லவா அச்சகம் வாங்க இருக்கிருர்கள், அச்சகம்! இச்சகம் பேசிகளிடம் அகப்பட்ட நாம், நமது மொழியையுங் கூட அன்றே இழந்துவிடுவோம் போலிருக்கிறது?

*

சென்னைக் கவர்னர் பிரகாசா கடந்த 8-ந்தேதி சொந்த ஊரான காசிக்குப் போயிருந்தாராம். அங்கே, கோயங்கா நடத்தும் சமஸ்கிருத நூலகம் ஒன்றைத் திறந்துவைத்தபோது சொன்னுராம், "சமஸ்கிருதமே, சகல இந்திய மொழிகளுக்கும் தாய்மொழி" என்பதாக! அதுமட்டும் பேச்சு வழக்கற்றுப் போகாமலிருந்தால் இன்று இந்தியாவுக்குள் இவ்வளவு பிரிவினை உணர்ச்சிகள் உண்டாகாது — என்றும் கூறினுராம், பிரகாசா. எப்படி நம் கவர்னர்? தமிழின் தொன்மையை அறிந்திருக்கவேண்டும் அவர். ஆனுல், இந்திய மொழிகள் யாவினுக்குமே சமஸ்கிருதம்தான் மூலமொழி என்கிருர்! இங்கேயே இருக்கும் இவரே, இப்படிக் கூறும்போது, வடவர் என்ன கருதுவார்கள் நமது தமிழைப்பற்றி? வெட்கமும் வேதனையும் தாக்குகிறது, நெஞ்சை. என்ன செய்வது.

*

அடுத்த பொதுத் தேர்தலைப் பற்றிய அச்சம் இப்போதேவந்துவிட்டது போலிருக்கிறது காமராஜருக்கு. படைகளைத் திரட்டுக. பணத் தோட்டாக்களை சேகரம் செய்க. என்று மும்முரமாக வேலை செய்ய ஆரம்பித்துவிட்டாராம். ஒவவொரு காங்கிரஸ் M. L. A.யும் மாதா மாதம், பணம் கொடுக்க வேண்டுமென்று கூறப்பட்டுவிட்டதாம், ஒவ்வொரு தாலுக்காவுக்கும் சம்பளத்தோடு ஒரு இன்ஸ்பெக்டர் நியமிக்கப்படப் போகிருராம், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி சார்பில். அவர், ஒவ்வொரு வட்டாரத்திலும் எப்படி காங்கிரஸ் கமிட்டிகள் பணிபுரிகின்றன என்று மேற்பார்வையிடுவாராம்! என்னயோசிக்கிறீர்கள்? மேற்பார்வையிடுகிற அளவுக்கு எங்கே காங்கிரஸ் கமிட்டிகள் உள்ளன என்ரு! எல்லாம், ஏற்படும், பாருங்கள்; தேர்தல் நெருங்க நெருங்க என்னென்னவோ கிளம்பும்!!

★

ஆண்டுச் சந்தா
ரூ. 7

மலர் 14
இதழ் 40
8-4-56

......ஓடோட......!

"எல்லோருக்கும் பயன்படும் வகையில், ஆஸ்பத்திரிகள், பள்ளிக்கூடங்கள் முதலியவற்றிற்கு நிதி உதவ கோயில்களின் பணம் உபயோகப்படுத்தப்படத் தகுந்தவாறு சென்னை மத தர்மஸ்தாபன சட்டத்தைத்திருத்தி அமைக்க வேண்டும்"

கோயில் பணத்தை எடுத்து, வேறு காரியங்களுக்குச் செலவிடுவதா! பள்ளிக்கூடமானாலென்ன, மருத்துவ விடுதியானாலென்ன, மகேசனுக்கு என்று பக்தர்கள் கொடுத்த மானியத்தை—கோயில் வருமானத்தை எடுத்து துஷ்பிரயோகம் செய்வதா? என்ன அக்ரமம்! அடுக்குமா இந்த அநீதி! இத்தகைய யோசனை கூறுவது அறிவீனம்!

அறிவீனம்—அக்ரமம் — என்று கண்டிக்கும் ஏடு, சுதேசமித்திரன் — கோயில் பணத்தை மற்ற நல்ல காரியங்களுக்குச் செலவிட வழி செய்யவேண்டும் என்ற யோசனை கூறியவர், கழகத்துப் பேச்சாளர் போலும். அதனால்தான், இந்த யோசனையின் உட்பொருள் 'நாத்திகம்' என்பதை மோப்பம் கண்டுபிடித்தறிந்து மித்திரன் சுடச் சுடக் கண்டிக்கிறது என்று பலரும் எண்ணுவர். ஆனால், கோயில் பணத்தை மக்களுக்குத் தேவையான நற்பணிகளுக்குச் செலவிடவேண்டும் என்றயோசனையை எடுத்துரைத்தவர், அமைச்சர், காங்கிரஸ் அமைச்சர்! கழகத்தை எட்டி என்று கூறிவிட்டு, காங்கிரசைக் கட்டித் தழுவிப் பயன்பெற்றவர். உழைப்பாளர் கட்சியின் மாஜி தலைவர், S. S. இராமசாமி படையாச்சி அவர்கள் இவ்வாறு பேசினார்!! திருச்செந்தூரில்!

திருச்செந்தூர் சுப்ரமணிய ஸ்வாமி கோயில் சென்று தரிசனம் செய்தார்.

தென்திருப்பேரை சென்று சுவாமி தரிசனம் செய்தார்.

பூர்ணகும்பம் முதலிய கோயில் மரியாதைகள் செய்யப்பட்டன.

மித்திரனே இந்தத் தகவல்களைத் தருகிறது.

ஆகவே, அமைச்சர் யாத்திரிகராக, பக்தராகவே காணப்படுகிறார்.

முருகனை வழிபடுகிறார்—நாத்திகரல்ல என்பதை நாட்டுக்கு நினைவூட்டுகிறார்.

முருகன் கோயில்மட்டுமா — அமைச்சர் ஆனதே அனுமன் கிருபையால்தான் என்று கூறிக் கடலூரில் உள்ளதோர் அனுமார் கோயிலுக்கு அபிஷேக ஆராதனை செய்து பூஜித்த ஆஸ்திகசிகாமணி அவர்.

மாரியாயியைமட்டும் மறந்தாரா என்ன! இல்லை! சென்னையில் ஏதோ ஓர் பேட்டையில் மாரியாயி திருவிழாவினை முன்னின்று நடத்தி வைத்தார்—அம்மட்டோ—நாத்திகத்தை நையப் புடைத்து, தமது ஆத்திகத்தை அறிவித்தார்.

இவ்வளவு செய்தும் என்ன ஆயிற்று?

'இருந்து முகந்திருத்தி' எனும் பாடலுக்கு இலக்கான கணவன்போல்தான், பரிதாபம், அமைச்சரை ஓடஓடச் சாடுகிறது, மித்திரன்.

கோயில்கள், கள்ளர்கள் கொட்டமடிக்கும் குகைகள்!

கோயில்கள், விபசார விடுதிகள்! — என்றெல்லாம் ஏசுவும் மகாத்மாவும் கூறினர்.

அமைச்சர், பாபம், அவ்விதமேதும் கூறினாரில்லை, பயபக்தியுடன் பூஜிக்கிறார்—புளகாங்கிதமடைகிறார்.

கோயிலார், கொட்டு முழக்குடன், பூர்ணகும்பத்துடன் வரவேற்றுப சரித்து, கோயிலில் வேறு யாரும் இராதபடி பார்த்துக்கொண்டு, பிரத்யேகமாக அமைச்சருக்குத் 'தரிசனம்' காட்டி, பகவத் பிரசாதம் கொடுத்து, அவர் எதிரில் பரிவும் பயமும் குழைந்த நிலையில் நிற்கும்போது, எந்த அமைச்சருக்குத்தான் புளகாங்கிதம் ஏற்படாது!

முருகன், — ஏ! பூஜையைப் பிழைப்பாக்கிக் கொண்டு முப்புரியே! இந்த ஆசாமியிடம் பல்லிளித்துக் கிடக்கிறீரே, இவர் பரமபக்தன் என்பதாலா? அமைச்சர் என்பதனுல்தானே இந்த அன்பும் அக்கரையும் காட்டுகிறீர்கள்? என் சன்னிதியும் உமது சுயநலக் கூடமாகத்தான் பயன்படுகிறது—ஏன் இந்த நடிப்பு? என்று கேட்கவா போகிருர்! கேட்பவராயிருந்தால் அர்ச்சகர் விட்டுத்தான் வைப்பாரா!

வெள்ளி நாமம், தங்கத்தால் செய்த திருசூரணம், போன்ற கோயில் திருவாபரணங்களைக் களவாடினுர், இராமானுஜாச்சாரியார் எனும் அர்ச்சகர்—அதே கிழமையில்—சேலம் மாவட்டம், தம்மம்பட்டி எனும் சிற்றூரில் லட்சுமி நரசிம்ம ஸ்வாமி கோயிலில்!

நரசிம்மம்—இரணியன் குடலைக் கிழித்துக் கொன்ற அவதாரம்! இராமானுஜாச்சாரியாருக்குத் தெரியும் அந்தப் புராணம், புரட்டு என்பது, எனவே துணிந்து களவாடினுர்—குடலையும் கிழிக்கவில்லை இது ஆகுமா அர்ச்சகா! என்று ஒரு சொல் கேட்கவுமில்லை—இரண்டுமாதக் கடுங்காவல் தண்டனை என்று வழக்கு மன்றம் தீர்ப்பளித்தது.

அமைச்சர், ஆஸ்திகத்தைக் காட்டியான பிறகு, மக்கள் மன்றத்தில் பேசும்போது, மக்களின் குறைபாடுகள் குறித்துப் பேசிய ஒரு பிரமுகர், கோயில் வருமானம் இதற்குச் செலவாகலாமே என்று கூற, அதற்குப் பதிலளிக்கும் வகையில், ஆலய நிர்வாகி, சட்டம் இடந்தரவில்லையே என்றுகூற, சட்டத்தைத் திருத்தினுல் நல்லது என்று அமைச்சர், நல்லுரை கூறினுர்—வேறேதும் செய்துவிடவில்லை.

கல்லுக்கு ஏன் இவ்வளவு செலவு? ஏன் ஆபரணச் சுமை? ஆண்டவனுக்கு என்று சாக்குக் கூறிக்கொண்டு ஆரியருக்கு ஏன் கொட்டி அழவேண்டும்? என்றபடி எல்லாம் பேசவில்லை.

இருந்து முகந்திருத்தி ஈரோடு பேன் வாங்கி, விருந்து வந்தது என்றுதான் சொன்னுர்.

கோயில் சென்று தரிசனம் செய்துவிட்டு,பயபக்தியைக் காட்டிவிட்ட பிறகு, பக்குவமாக, ஆஸ்பத்திரி, கல்விபோன்ற நல்ல காரியங்களுக்குக் கோயில் பணத்தைச் செலவிடலாம் என்றுதான் சொன்னுர்.

ஆடினுள் ஆடிப் பழமுறத்தால் சாடினுள் ஓ டோ ட த் தா ன் —எனபதல்லவா பாடல்! நீ கெட்ட கேட்டுக்கு விருந்துக்கு வேறு அழைத்துவந்தாயா!

இதற்காகத்தான், எனக்குச் சீவிச் சிங்காரித்துக் குழைந்தாயா. என்று கேட்டுப் பழமுறத்தால் சாடினுளாம். அதுபோல, ஒஹோ! உன் பக்தி வேடமும், பூஜையும் இதற்குத்தானு? கோயில் பணத்தை எடுத்து, கண்ட கண்ட காரியத்துக்குச் செலவிடச் சொல்லியா பேசத் துணிகிருய் என்று கேட்டு, மித்திரன், அமைச்சரின் பேச்சு அறிவீனம், அக்ரமம் என்று சாடுகிறது. **கோயில் வருமானத்தை துஷ்பிரயோகம் செய்யும் யோசனை எதையும் அமுலாக்குவது அனர்த்தமாக முடியும்**—என்று எச்சரிக்கிறது.

ஆஸ்திகம் கலந்த அன்புரைக்கு இந்தக் கதி நேரிடுகிறது!! பரிதாபம்! பரிதாபம்!!

★

கூரை ஏறி.....!

தேவிகுளம் } **தமிழருக்கு**
பீர்மேடு }

என்று வாதாடினேம்.

★

டில்லி ஏற்கவில்லை

எனவே

தீர்ந்துபோன பிரச்சினை அது
என்று இருந்துவிட்டோம்

என்று பேசி

பஞ்சைப் புத்தியை
தலையாட்டித்தனத்தை
அடிமை மனப்பான்மையை

காட்டிய அமைச்சர்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சென்னைக்குத் தந்த தொகை மிக மிகக் குறைவு, டில்லியிடம் வற்புறுத்தி மேலும் பெறுவேன்

என்கிருர்!

கூரை ஏறிக் கோழி பிடிக்க வக்கில்லை!

கோபுரம் ஏறி வைகுந்தத்துக்கு வழிகாட்டப் போகிருராம்!

நாவலர் நம் கழகக் காவலர்

தம்பி!

ஒரு அலங்காரக் கூடம் — இரத்தின ஜமுக்காளம் விரிக்கப்பட்டிருக்கிறது—சோபாக்கள் வித விதமானவை போடப்பட்டுள்ளன —வட்ட மேஜை, அதன் மீது கண்ணாடி வட்டிலில் அழகிய காகிதப்பூ —சுவரிலே பண்டித ஜவஹர்லால் நேருவும் மகாத்மாவும் நேசமும் பாசமும் ததும்பும் முறையில் உட்கார்ந்து கொண்டு உரையாடும் காட்சியைக் காட்டும் படம்—பண்டித நேருவின் வேறுபல அலுவல்களைக் காட்டும் படங்கள் உள்ளன —ஒரு புறத்தில் 'ராஜாஜி' இருக்கிறார் படத்தில் — மற்றும் பல தேசியத் தலைவர்களின் படங்கள்.

சீமான், பரபரப்பு அடங்காத நிலையில், கூடத்தில் உலவிக் கொண்டிருக்கிறார்—பெயரா, தம்பி! பெயரையா கேட்கிறாய்? சொல்லக் கூடாதே, ஆமாம், பெயர்பற்றி உனக்கேன் அவ்வளவு கவலை? சீமான் என்றால் போதாதா! பெயர் ...சீமான் சந்தர்ப்பவாதி என்று வைத்துக்கொள்ளேன் —சீமான்களுக்குப் பெயர் அவ்விதம் இருக்கிறதோ இல்லையோ, இயல்பு அப்படித் தானே இருக்க வேண்டும்—இருப்பதால் தானே சீமான்களாக முடிகிறது.

சீமான் சந்தர்ப்பவாதியின் சிங்கார மாளிகைக் கூடத்திலே, வெலிங்டன் படம் ஒருபுறத்திலும் விசுவாமித்ரா — மேனகா படம் மற்றோர் புறத்திலும், தோட்டக் கச்சேரிக் காட்சியும், துரைமாரிடம் கைகுலுக்கிய காட்சியும் காட்டும் படங்களும் இருந்தன; அது, முன்பு!

இப்போது, சீமான் சந்தர்ப்பவாதி, ஜில்லா காங்கிரஸ் போஷகர், தாலுக்கா காங்கிரஸ் பொக்கிஷதார், நகர காங்கிரஸ் தலைவர், மாகாணகாங்கிரசுக்குப் பயணமாகி மந்திரி வேலையை எட்டிப் பிடிக்க வேண்டியவர்!

சீமான் சிறிதளவு சஞ்சலத்துடன், கடிகாரத்தைப் பார்ப்பதும் நுழைவு வாயிலை நோக்குவதுமாகவே இருந்தார் — உள்ளே நுழைந்தான் வேலையாள்.

"என்னடா..."

"கிடைக்கலிங்க..."

"மடையா...கடை வீதியிலே போய்ப் பார்த்தயா...பொட்டைக் கண்ணா! சரியாப் பார்த்துத் தொலைத்தயா?"

"பார்த்தேனுங்க......ஒரு கடையிலேகூட இல்லைங்க..."

"படக்கடையிலே?"

"இல்லிங்க! கதர்க் கடை ஐயரைக்கூடக் கேட்டேன் —இரவலாகவாவது கொடுக்கச்சொல்லி ......"

"என்ன சொன்னாரு?"

"விழுந்து விழுந்து சிரிக்கிறாரு.........அந்தப் படம் இங்கே ஏதுடான்னு கேட்கறாரு..."

"பெரிய கடைவீதி பூரா விலுமா இல்லே...".

"இல்லிங்க...போசு படம் இருக்குதுங்க......தாகூர் படம் கிடைக்குது — பிரசாது படம் பார்த்தேனுங்க...விவேகானந்தரு படம் கிடைக்குதுங்க..."

"வெங்காயம் கிடைக்குது—ஒரு கடையிலுமா, காமராஜர் படம் கிடைக்கல்லே..."

"இல்லிங்களே..."

"என்னடா பெரிய இழவாப் போச்சு......இன்னும் ஒரு அரை மணி நேரத்திலே வந்துவிடுவாங்களே...ஏலே! டேய்! ஓடிப்போயி, காங்கிரஸ் கமிட்டி ஆபீசிலே..."

"இருக்குதான்னு பார்க்கச் சொல்றிங்களா? பார்த்தாச்சிங்க... கிடையாதுங்க..."

"நாசமாப்போச்சி..."

"ஐயர்மாரெல்லாம் வருகிறாங்க........" என்று கூறிக்கொண்டு, கணக்கப்பிள்ளை உள்ளே நுழைகிறார்; சீமான் வேலையாளை வெளியே விரட்டிவிட்டு முகத்தை மலரச் செய்து கொள்கிறார். உள்ளே கதராடைக் கனவான்கள் வருகிறார்கள்.



சீமான்:- "வாங்க! வாங்க! நமஸ்காரமுங்க...நமஸ்காரம்...இப்படி ...இந்தச் சோபாவிலே..."

ஒருவர்:- நமஸ்தே! நமஸ்தே!"

மற்றொருவர்:- வந்தேமாதரம்.

மூன்றாமவர்:- நீங்க உட்காருங்க...

சீமான்:- பரவாயில்லிங்க...

நான்காமவர்:- சிவ! சிவா! நீங்க நிற்கறது, நாங்களெல்லாம் உட்காருவதா, செச்சேச்சேச்சே! உட்காருங்க...

சீமான்:- ஆகட்டுங்க...

முதலாமவர்:- (ஒருவரைக்காட்டி) இவர்தான்...

சீமான்:- இதென்னுங்க அறிமுகப்படுத்தவேணுமா! உலகமறிந்தவர், ஊராள்றவரு, அவரைத் தெரியாதவங்களும் உண்டா? நம்மைப்பத்திச் சொல்லுங்க அவருக்கு.

முதலாமவர்:- சொல்லித்தானே அழைத்துக்கொண்டு வந்திருக்கிறேன் — உங்களோட தயாள குணத்தையும் தர்ம சிந்தனையையும், காங்கிரஸ் பக்தியையும் கேள்விப்பட்ட பிறகுதான் அவர் தம்முடைய பல வேலைகளை விட்டுவிட்டு, வந்தார்...

சீமான்:- என்பாக்யம்னுதான் சொல்லோணும்...பாருங்கோ, இங்கே ஒரு தொண்டன், இந்த மாதிரி ஆளுக வீட்டுக்கு எங்க தலைவரு வரவே மாட்டாருன்னு, கடை வீதியிலே பேசிவிட்டிருக்கான்......கண்டபடி என்னைப் பத்தி, இல்லாததும் பொல்லாததுமாப் பேசினானுங்க...

மற்றவர்:- தள்ளுங்க குப்பையிலே... தடியடிபட்டேன்...ஜெயிலுக்குப் போனேன்...நான் தியாகி, தேச பக்தன், அப்படி இப்படின்னு, சொல்லிக்கொண்டே காலத்தை ஓட்டலாம்னு பார்க்கிறவனுங்க அவனுங்களெல்லாம். அவனுங்க பேச்சை விட்டுத் தள்ளுங்க...

சீமான்:- எதுக்கும் கொஞ்சம் அடக்கி வைக்கவேணுமுங்க, இந்தமாதிரி அரட்டைகளை...

ஒருவர்:- சரி...அதை எல்லாம் நாம, சாவதானமாப் பேசிக் கொள்வோம்—இப்ப, வந்திருக்கிற விஷயத்தை...

சீமான்:- சொல்லுங்க...

ஒருவர்:- நான், இவ்வரை, வேறே எந்த இடத்துக்கும் வரவேண்டாம், அதை எல்லாம் நாங்க பார்த்துக்கொள்ளுரோம்னு சொல்லி, இங்கே மட்டும் வந்தாப் போதும்னு சொல்லி...

சீமான்:- ரொம்பச் சந்தோஷமுங்க...

மற்றவர்:- பேப்பர்லே பார்த்திங்களேல்லோ...

சீமான்:- ஐயா, இங்கே வருகிறார் என்கிற சேதிங்களா? காணோமே ......

ஒருவர்:- அதல்ல......ஆவடி காங்கிரசுபற்றி...

சீமான்:- அதுங்களா ...ஒவ்வொரு நாளும் வருதுங்க...படிக்கப் படிக்கப் பிரம்மானந்தமா இருக்குதுங்க...

மற்றவர்:-செலவு ஏராளமா இருக்குது...

சீமான்:-இதென்னங்க பிரமாதம் ......பிரம்மா நினைச்சா ஆயுசுக்குக் குறைவான்னானும், அதுபோல, நம்ம தலைவரு மனசு வைச்சா தீர்ந்தது......பட்ஜட்டிலேயே ஒரு பத்து இலட்சம் ஒதுக்கிவிட்டாப் போகுது...

மற்றவர்:-அப்படிச் செய்யலாமா... அதிகாரம் இருக்குன்னு வையுங்க...எதிர்த்துக் கேட்கவும் ஆள் எவன் இருக்கான்... ஆனாலும், நாம் அப்படிச் செய்யப்படாது பாருங்க...அதனாலே தான், பணம் 'தண்டி'...பிரமாதமா நடத்திக் காட்டறதுன்னு தீர்மானிச்சாச்சி.......உங்களிடமிருந்து, ஐயா, ஒரு இருவது எதிர்பார்க்கிறாரு...

சீமான்:- நீங்க ஒரு வேடிக்கை... டாட்டாவும், பிர்லாவும் தரலாம்...நான் என்னங்க, தகரக் குவளை...என் சக்திக்கு ஏற்றதை நான் தருவேனுங்க...

மற்றவர்:-அனுமாருக்கு, அவரோட சக்தி அவருக்குத் தெரியாதாம் ...... பிறர் சொன்னாத்தான் தெரியுமாம்...... கடலைப் பார்த்ததும் கலங்கிப்போனாராம், இதை எப்படித் தாண்ட முடியும்னு... ஜாம்பவான் சொன்னாராம்...... அனுமான்! தாண்டு, உன்னாலே முடியும்னு...... தாண்டினார்! இராமாயணம் கேட்டிருக்கேன். அதுபோலே, உங்களோட சக்தி உங்களுக்குத் தெரியாது......

நாங்கதான் சொல்லவேணும்; இருவதுக்குக் குறைஞ்சா இவர் வந்ததுக்கும் கௌரவமல்ல...... உங்கள் யோக்யதைக்கும்......

சீ:-பிடிவாதம் செய்யாதிங்க...... பெரியவரை எதிரே வைத்துக் கொண்டு, என்னோட மானத்தைக் கெடுத்துப்போடாதிங்க... இந்த வருஷம் ரொம்ப'டல்லு'ங்க ......வியாபாரம் சரியில்லே...... நம்ம ஆபீசருங்களும் புலியாப் பாயறுங்க... மேலே விழுந்துக் கறுங்க... எந்த மாதிரியா எழுதினாலும், அவங்க கண்ணுக்குத் தப்புக் கணக்காத்தான் தெரியுது...... நான் இதைப்பத்தி தலைவரிடமே வந்து சொல்லணும்னு எண்ணிக்கொண்டிருந்தேன்...... ஏதோ என அதிர்ஷ்டம் அவரே வந்திருக்காரு...

ஒருவர்:-உங்களுக்கு வேண்டியதை நான் கவனித்துக்கொள்றேன்— அதைப்பத்தி இப்ப பேசத் தேவையில்லை...

சீ:-சரிங்க... நல்ல காரியம் நடக்கப் போகுது. நம்மோட கஷ்டத்தைக் கவனிக்கப்படாது. ஒரு அஞ்சு அனுப்பி விடறேன்.

ஒருவர்:-அதென்னங்க அஞ்சும் பிஞ்சும்...

சீ:-உங்களண்டை சொல்றதிலே தப்பு என்னங்க, அந்த அஞ்சுக்கே நான் அகர்சந்துகிட்டே தான் போகவேண்டி இருக்கு...

(15-ம் பக்கம் பார்க்க)

கவர்னர்

சம்பளக் குறைப்பு

—

தி. மு. க. கூறிவரும் இக்கிளர்ச்சிக்கு நாடு தயாராகிறது!

சோஷியலிஸ்டு கட்சி, இதற்கு ஓர் போர்த் திட்டம் வகுக்கப் போகிறது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

வரவேற்கிறோம்.

சிறாரும் ஏளனம் செய்கின்றனர்

[மா. கி. தசரதன்]

தெரியாததைப் பற்றியோ புரியாததைப் பற்றியோ வாயைத் திறவாமல் இருந்தால் எத்துணையோ நன்மை பயக்கும். ஒரு சிலராவது 'கொஞ்சம் தான்தெரியும்அவருக்கு,ஆனால்என்ன அடக்கம் பாருங்கள். அமைதியாக இருக்கிறார்' என்று பாராட்டிவிட்டுப் போவார்கள். ஆனால் சுப்ரமணியனார் எனும் அமைச்சர் பெருமகனாரோ அவ்வாறு அமைதியடையாமல் "எனக்குத் தெரியாதா எலுமிச்சம் பழம் இஞ்சிபோல் கசக்குமே" என்று கூறுகின்றார் அவசரப்பட்டு. இவருக்கு எலுமிச்சம் பழமும் தெரியாது; இஞ்சி கசப்பதன்று என்பதும் தெரியாது எனக் காட்டுகின்றார்.

"தமிழ் நாடு என்ற பெயர் என்றுமே இருந்ததில்லை' என்று செப்புகிறார், அமைச்சர் சுப்பிரமணியனார்.

அழுவதா, சிரிப்பதா, ஆத்திரப்படுவதா என்றே தெரியவில்லை அமைச்சரின் கூற்றைப் படிக்கின்றபோது!

"தமிழ்நாடு என்று ஒன்று உண்டு: இன்று மட்டுமன்று; நேற்றுமட்டுமன்று; கல் தோன்றி மண் தோன்றாக் காலமுதல் உண்டு; உண்டு"

பிற்காலத்தில் தமிழ் இரத்தக் கலப்புடையோரே யாரேனும் ஐயுறுதல் கூடும் என்றுதான்போலும், வெறும் இலக்கியத்திலும் வரலாறு பேசத் துணிந்தபலர், தமிழகத்தின் எல்லைக் கோடுகளை எழுதிக் காட்டியுள்ளனர்.

"வடவேங்கடம் தென்குமரி
ஆயிடை
தமிழ் கூறு நல்லுலகம்..."
—தொல். பாயிரம்.

',நெடியோன் குன்றமும்
தொடியோள் பௌவமும் —சிலம்பு

"தென்குமரி வடபெருங்கல்,
குணகுடகட லாவெல்லை" —புறம்-17

"தமிழகத்தின் எல்லைகளைத் தெள்ளிதின் கூறிவிட்டுத் 'தமிழ்நாடு' எனுந் தொடரை எடுத்து ஆளாமைக்குக் காரணம் இருத்தல் வேண்டுமன்றோ?

முன்னாளில் நாடு எனுஞ்சொல் சிறுநிலப் பகுதிகளை உணர்த்தி வந்ததே தவிர, இன்றுபோல் பெரும் பகுதியைக் குறிப்பிட வழங்கவில்லை எனத் தெரிகின்றது.

குறுநில மன்னர்களையும், சிற்றூர்த் தலைவர்களையும்'நாடனே'என அழைத்ததினாலும், வள்ளல்கள் ஆண்ட பகுதிகளை நாடுகள் எனக் குறித்திருப்பதினாலும் சிறு பகுதிகளைத்தான் 'நாடு' என அழைத்தனர் எனக் கொள்ளுகின்றோம். இவ்வாறு பல நாடுகளைக்கொண்ட தமிழகத்தை 'தமிழ் உலகம்' என்றும் 'தமிழகம்' என்றும் வழங்கிவந்திருக்கின்றனர்.

பொதுமை சுட்டிய மூவருலகமும்
புறம் 357

வையக வரைப்பில் தமிழகம் கேட்ப
புறம் 168

என்றெல்லாம் தமிழ் மொழி வழங்கிய நிலப்பரப்பைக் குறித்திருக்கின்றனர்.

[இந்நூல்களுக்குப் பிறகு தோன்றிய இவற்றின் பழைய உரைகளில் 'உலகம்' 'தமிழகம்' என்னும் தொடர்களுக்குத் 'தமிழ்நாடு' என்றுதான் பொருள் குறித்திருக்கின்றனர்—இவ்வுண்மை மிகப் பழைமையானது என்பது குறிப்பிடத்தக்கது]

தமிழ்நாடு எனும் தொடர் வேண்டுமாயின் பண்டு காணப்பட்டிலது எனக் கூறலாமே ஒழிய, தமிழகத்திற்கெனப் பெயரே கிடையாது என்று யாருமே கூறத் துணியார்; ஆனால், அமைச்சர் துணிந்து கூறுகின்றார், 'தமிழ் நாடு' என்று என்றுமே பெயர் இருந்தது இல்லை என்பதாக.

நாட்டில், அமைச்சரைவிட தமிழ் இலக்கியம் மிகுதியாகக் கற்ற அறிஞர்கள் எத்துணையோ பேர் இருக்கின்றனர், அவர்களைக் கேட்டால் தெரியும் தமிழ்நாட்டைப்பற்றி.

அமைச்சருக்குப் போதிய வாய்ப்போ வசதியோ இன்மையால் பழந்தமிழ்நூல்களில் வேண்டுமாயின் பயிற்சி இல்லாமற்போகலாம். ஆனால் தேசியக் கவி என்ற ஒரு காரணத்திற்காகவாவது பாரதியாரின் கவிதைகளைப் படித்திருக்கவேண்டும். இன்றேல், இசைவாணர்கள் இசைக்கின்றபோதாவது கேட்டிருக்கக்கூடும்.

செந்தமிழ்நாடு எனும் போதினிலே
இன்பத் தேன்வந்து பாயுது
காதினிலே

என்ற வரியைக்கூடவா அறியாமல் இருக்கின்றார்!

அமைச்சர், அரசியல் அரங்கில் அடியெடுத்து வைத்து ஆடத் தொடங்குமுன்னரே பல பெரியோர் அங்கே உலவி வந்திருக்கின்றனர். அவர்கள், 'தமிழ்நாடு எனும் பெயர் இல்லை என்று கூறத் துணியவில்லை. அமைச்சர் சார்ந்திருக்கும் காங்கிரஸ் கட்சியை அடிநாளில் உரமிட்டும் உழைப்பிட்டும் வளர்த்த பெரியோரெல்லாம் காங்கிரசின் பெயரைத் 'தமிழ்நாடு காங்கிரஸ்' என்றுதான் அழைத்திருக்கின்றனர்.

இத்துணைபேர், கற்றோர், உணர்ந்தோர் எல்லோரும் ஒப்புக்கொண்ட ஒன்றினைத்தான் சுப்பிரமணியனார் மறுக்கின்றார்.

அதிகாரத்தின் ஆதரவில் நின்று கொண்டு' அறியாத ஒன்றை அறிந்தார்போல் பேசும் அமைச்சர் ஒருவரும் நம்மிடையே நடமாடுகின்றாரே என்பதைஎண்ணும்போது, நாடுஎந்த அளவுக்குக் கீழ் நிலையை அடைந்துள்ளது என்பது தெள்ளிதிற் புலனாகின்றது.

வாதத்திற்காகவாவது ஒப்புக்கொள்ளுவோம் தமிழ் நாடு என்ற பெயர் என்றுமே இருந்ததில்லை என்று. என்றுமே இல்லாதது இன்று முளைக்கக்கூடாது என்பது அமைச்சரின் வாதமாகின்றது.

ஆயின், இந்தியா எனும் பெயர் எந்தக் காலத்தில் தோன்றியது? பண்டு தொட்டு இருந்துவரும் பெயர் அது வன்றே. எனின், ஏன் அமைச்சரே அதனை ஏற்றுக்கொண்டீர்?

அவ்வாறு இலக்கியத்திலோ, முன்னாளிலோ 'தமிழ் நாடு' என்ற பெயர் இல்லை என்று ஒப்புக்கொண்டாலும் கூட—உண்மைக்கு மாறாக ஒப்புக்கொண்டாலும்கூட, இன்று மக்கள் தங்கள் பகுதிக்குத் தமிழகம் எனப் பெயரிடக் கோரும்போது அதைத் தடுக்க எந்த ஆற்றலும் முன்னிற்க இயலாதே. மக்களாட்சி என்று கூறிவிட்டு, மக்கள் விருப்பத்தைப் புறக்கணிப்பது அறமாகாது. எனவே அமைச்சருக்குக் குறிப்பிடுகின்றோம்;– தெரியாததைப் பற்றிப் பேசாதீர்கள்: மக்கள் விருப்பத்திற்குமாறு எண்ணாதீர்கள்.

எலுமிச்சம் பழம் இஞ்சி போல் கசக்கும் என்று பேசாதீர். ஏளனம் செய்கின்றனர் சிறார்கள்; ஏக்கமடைகின்றனர் பெரியவர்கள்; எம்மனோர் 'தமிழ் நாடு' அறியாதார், விரும்பாதார், தமிழ் அமைச்சர்களாகியுள்ளனரே என்பதனை எண்ணி எண்ணி வேதனைப்படுகிறோம்.

★

பொற் குவியல்!

1943-ல் ஓர் நாள். நீதிக் கட்சியின் தென்னாற்காடு மாவட்டத் தலைவராயிருந்த ஐம்புலிங்க முதலியாரின் நிலம் ஒன்றில் கிணறு ஒன்று வெட்டினார்களாம், பாசனத்திற்காக. 'கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது' என்று பழமொழி கூறுவார்கள். ஆனால் அங்கே பூதம் புறப்படவில்லை. மாறாக, குத்துப்பட்ட நாளத்திலிருந்து குருதி பீறிடுவதுபோல வெட்டப்பட்ட கிணற்றிலிருந்து கரித் துண்டும் கந்தகமும் கலந்த தண்ணீர் பூமி மட்டத்திற்கும் 30, 40 அடி உயரம் வரை பீறிட்டுப் பொங்கியதாம்! ஆச்சரியத்தால் பிளந்த வாயை மூடிக்கொண்டு வாளா இருந்துவிடாமல் சர்க்காருக்குத் தகவல் தந்திருக்கிறார், ஐம்புலிங்கம், 'பூகர்ப்ப இலாகாவினர் ஏற்கனவே தென்னாற்காடு மாவட்டத்தில் பழுப்பு நிலக்கரி கிடைக்கக் கூடும் எனக் கண்டிருக்கின்றனர். இப்போது கிணற்று நீர் ஊற்றில் காணப்படும் கரித்துண்டுகள் அவற்றை மெய்ப்பிக்கின்றன. கவனிக்கிறேன்' என்று கூறினராம்.

பழுப்பு நிலக்கரி கிடைக்கும் வெறும் சுரங்கம் மட்டும் அல்ல நெய்வேலி. அங்கு பரவிக்கிடக்கும் 'மண், மண்ணல்ல. ரசாயனப் பொருள் வளம் மிகுந்தபொன். ஆராய்ச்சிக்கு இன்னும் அகப்படாத பொருள்கள்கொண்ட நிலப்பரப்பு. வளம் என்ற செந்தமிழ்ச் சொல்லின் விரிந்தபொருள் நெய்வேலி என்றால் அது மிகையாகாது. திராவிடத்தாயின் மடியில் புதைந்துகிடக்கும் பொற்குவியல்தான் அது.

திராவிடத்தில் இல்லாதவளம் தான் எது? நில வளம் நீர்வளம் கடல் வளம் மலைவளம், குடிவளம், அறிவுவளம், மனவளம் பொருள்வளம் பண்புவளம் மொழிவளம் ஆற்றல்வளம், இன்னும் உலகில் எத்தனை வளங்கள் உண்டோ அத்தனையும் உண்டு, கோல்வளம் தவிர.

கோல்வளம் குன்றியிருப்பதால் தான் இந்தநாட்டுவளம் இந்த நாட்டவர்க்குப் பயன்பட முடியாது, கொள்ளைபோகிறது!

சர்க்கார் அழைப்பின்பேரில் 37-பேர்கள்— இரண்டொருவரைத் தவிர அத்தனைபேரும் பத்திரிகைப் பிரதிநிதிகள்—கடந்த பிப்ரவரி 28-ந்தேதி சென்னையிலிருந்து புறப்பட்டோம் பஸ் ஒன்றில்.

பாண்டியன்

"நம் நாடு"

அவரவர்களுக்குப் பழக்கமான, பிரியமான நண்பர்களுடன் உரையாடிக்கொண்டே சென்றோம். உரையாடல் இடை இடையே பயன்மிக்க விவாதமாகக்கூட உருவெடுத்ததால், கிடைத்த சுவை, நூற்று ஐம்பது மைல்களுக்குமேல் பிரயாணம் செய்வதால் இயற்கையாக எழும் அலுப்பத் தெரியாமல் செய்தது. இரவு 7-30 மணிக்கு நெய்வேலி அடைந்தோம்.

29-ந் தேதியன்று காலையில், காலைக் கடன்களை முடித்துவிட்டு; 7-30 மணி அளவில் நெய்வேலியைக் காணப் புறப்பட்டோம்.

இங்கு நெய்வேலியில் நான் சந்தித்தவர்களிடம் கேட்டுத் தெரிந்தவற்றையும், கண்டவற்றையும் உங்களுக்குக் கூறுகிறேன்.

தென்னாற்காடு மாவட்டம் கடலூர் வட்டத்தில் நெய்வேலி கிராமம் இருக்கிறது.

வானம் பெய்தால் விளையும் கழனிகளும், உழவர் வதியும் குடிசைகளும், பலன் பல தரும் மரங்களடர்ந்த சிறு 'காடு'களும் நிறைந்த நிலப்பரப்பில், நெய்வேலியைச் சுற்றிலுமாக சுமார் 100சதுர மைல் பரப்பில் மொத்தமாக **200 கோடி** டன் பழுப்பு நிலக்கரி கிடைக்கும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அதாவது அங்கு, ஆண்டொன்றுக்கு **200** லட்சம் டன் நிலக்கரி தோண்டுவதானால் **100** ஆண்டுகளுக்குத் தோண்டி கரி எடுத்துக்கொண்டே இருக்க முடியும்.

பூமியிலிருந்து 160 அடியிலிருந்து 250 அடி ஆழத்திற்குக் கீழேதான் நிலக்கரி படிந்திருக்கிறது. படிந்திருக்கும் நிலக்கரியின் கனம், ஒன்று முதல் 89 அடி வரை — சராசரியாக 55 அடி கனத்திற்கு படிகங்கள் இருக்கின்றன.

சாதாரண மண், பிறகு மணற் பாறைகள் (கடினமானவை) களிமண், (இங்குதான் சாதாரணமாக எல்லா நிலத்திலும் நீர் சுரக்கும் ஊற்றுகள் உள்ளன) கீழே வெள்ளைக் களிமண், அதற்கும் கீழே மஞ்சள் களிமண், பின்னர் பழுப்பு நிலக்கரி அதற்கும் கீழே, ஒருவகை மண், அதற்கும் கீழே, அளவிடற்கரிய நீரோட்டம். இந்த நீரோட்டத்தில் 50 அடி கீழேயிருந்து பூமியின் மட்டம் சுமார் 400 அடி என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. உலகில், ஆஸ்திரேலியா அமெரிக்கா, போலந்து, செக்கோஸ்லவேக்கியா, கிழக்கு ஜெர்மனி, சீனா

முதலிய நாடுகளில் எல்லாம் நெய்வேலியில் கிடைப்பது போன்ற பழுப்பு நிலக்கரி கிடைக்கிறது. ஆனால் அங்கெல்லாம், நிலக்கரிக்கு மேலே, நெய்வேலியில் கிடைப்பது போன்ற பயன் பல தரும் பலவகை மண்களோ, நிலக்கரிக்குக் கீழே, நெய்வேலியிலிருப்பதைப் போன்ற அழுத்தம் மிகுந்த நீரோட்டமோ கிடையாது. நெய்வேலியில் நிலக்கரிக்குக் கீழே உள்ள நீரோட்டம் உலகில் வேறெங்குமுள்ள நிலக்கரிச் சுரங்கங்களில் காணப்படாத ஒன்று என்றும், அதுவே நெய்வேலி நிலக்கரியைச் சுலபத்தில் வெளிக்கொணர முடியாமைக்குக் காரணம் என்றும் கூறுகிறார்கள். எப்படி? என்பதை விளக்கினார், அங்குள்ள நிபுணரான சீனிவாசன். அமிர்தம் கிடைக்கும் இடத்தில் விஷமும் இருப்பதில்லையா? என்று அவர் கூறியபோது பலரும் சிரித்தார்கள்.

பூமியைக் குடைந்து, பழுப்பு நிலக்கரியைத் தோண்டும்போது, நிலக்கரிப் படிவங்களுக்குக் கீழுள்ள சதுர அடிக்கு 6 முதல் 8 டன்வரை மேல்நோக்கி அழுத்தும் சக்திகொண்ட நீரோட்டம், மேல்நோக்கிப் பொங்கி, பெருநஷ்டத்தை (வேலை செய்யும் தொழிலாளர்களையும், இயந்திரங்களையும் அழித்துவிடும் நஷ்டத்தை) உண்டு பண்ணும் அபாயமிருக்கிறது என்று அவர் விளக்கம் கூறினார்.

நிலக்கரிக்குக் கீழுள்ள நீரோட்டத்தின் அழுத்தத்தைக் கட்டுப்படுத்திவிட்டால் இந்த அபாயத்தைத் தவிர்த்து, நிலக்கரியைச் சுலபமாகத் தோண்டமுடியுமாம்.

கடந்த காலத்தில் நடைபெற்ற பரிசோதனைகள் மூலமாக, இந்த நீரோட்டத்தைக்கட்டுப்படுத்துவது சாத்தியமானது என்று கண்டிருக்கிறார்கள். பிப். 29ந் தேதியன்று நாங்களும் கண்டோம்.

நிலக்கரிக்கும் கீழே நீரோட்டத்தின் பாதிமட்டம்வரை அதாவது சுமார் 400 அடி ஆழம்வரை குழாய்க் கிணறுகள் அமைத்து, பேராற்றல்கொண்ட மின்சார பம்புகள்மூலம், இடைவிடாது தண்ணீரை வெளியே இறைத்துக் கொண்டே இருந்தால், நீரோட்டத்தினால் நிலக்கரி தோண்டும்போது ஏற்படக்கூடிய அபாயத்தைத் தவிர்த்துவிடலாம்,

இப்படி, நிமிடம் ஒன்றுக்கு 1000 காலன் நீர் இறைக்கும் மின்சார பம்புகள் 20 மூலமாக நாள் ஒன்றுக்கு 24 மணி நேரமும் இடைவிடாது 100 நாட்கள்வரை நீரை இறைத்துக் கொண்டிருப்பதினால் கீழுள்ள நீரோட்டத்தின் அழுத்த சக்தி எவ்வளவு குறைகிறது என்ற விவரங்களைப் பெரும் அளவில் கணக்கெடுக்கும். கடைசிக் கட்டப் பரிசோதனைதான், அன்று துவங்கிற்று.

தண்ணீர் இறைக்கப்படும்போது கீழ் நீர்மட்டம் எவ்வளவு தணிகிறது என்பதை, தாமாகவே கணிக்கும் இயந்திரங்கள் 4 பொருத்தப்பட்டுள்ளன, இவை அல்லாமல், பரவலாக, சுமார் 400 சோதனைக் குழாய்க் கிணறுகளும் தோண்டப்பட்டு பல்வேறு இடங்களிலும் கீழ் நீர் மட்டத்தின் மட்டமும் அழுத்த சக்தியும் குறைவது கணக்கிடப்படுகிறது.

இந்தச் சோதனை முடிந்ததும், இதன் வெற்றி (வெற்றி நிச்சயம் என்று அதிகாரிகள் சந்தேகமின்றிக் கூறுகின்றனர்) நிலக்கரியைத் தோண்டியெடுக்கும் வேலையைத் துவங்க, சர்க்காருக்குக் கட்டளை பிறப்பிக்கும். இதற்கிடையில், ஒரு குறிப்பிட்ட பகுதியில் தோண்டி எடுக்கப்பட்ட நிலக்கரி, சுமார் 30 டன்வரை, நிலக்கரி கொண்டுள்ள பல்வேறு அம்சங்களையும் ஆராய்வதற்காக, கிழக்கு ஜெர்மனிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது.

சர்க்கார் இப்போது, நெய்வேலித் திட்டம்பற்றித் தரக்கூடிய விபரங்கள் எல்லாம், திட்டமிட்டுள்ளபடி காரியங்கள் நடைபெறுமானால் 1960 ஜனவரியில் நிலக்கரி பெருமளவில் கிடைக்கக் கூடிய வகையில், சுரங்க வேலையைத் துவங்குவது. கிடைக்கும் பழுப்பு நிலக்கரியை எரிபொருளாக உபயோகித்து துவக்கத்தில் 50,000 கிலொவாட் என்று ஆரம்பித்து சுமார் 2-லட்சம் கிலொவாட் மின்சாரம் உற்பத்திசெய்யும் தெர்மல் ஸ்டேஷன் அமைப்பது, ஒரு அமோனிய உற்பத்தித் தொழிற்சாலை அமைப்பது என்பவைதான்.

இதுவரை நடைபெற்றுள்ள பரிசோதனைகளுக்கு உபயோகப்பட்டுள்ள இயந்திரங்களில் பலவும், அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை. இனியும் வெளி நாடுகளிலிருந்தே இயந்திரங்கள் இறக்குமதி செய்யப்படவேண்டியிருக்கிறது என்று அதிகாரிகள் கூறினர்.

முகப்பில்

மெல்போர்ன் பல்கலைக் கழகத்திலே, ஆராய்ச்சிகள் செய்துகொண்டுள்ளார், மனித மூளைக்குக் கேடு வந்தால்எப்படியெப்படி நீக்கமுடியும் என்பதுபற்றி. டாக்டர் லேசா. டபுள்யு. சாக்கோ எனும் பெயர்கொண்ட இப்பெண்மணி வேலூர் மருத்துவக் கல்லூரியிலே பேராசிரியராவார். மனிதருக்கு வரும் மூளைக் கோளாறு, மூளைக் காய்ச்சல், போன்ற முக்கியமான வியாதிகளைப் போக்கும் மருத்துவ முறைகளைக் கண்டறிந்து வந்து, வேலூரிலிருந்தபடி பணியாற்றப் போவதாக அறிவிக்கிறார் ஆஸ்திரேலியாவிலிருந்து! ஒரு கிருஸ்துமதப் பெண் திலகத்துக்கு இருக்கும், மனித சேவா உணர்ச்சிகூட, மனித இனத்துக்காக உழைப்பதாகச் சொல்லும், 'இங்குள்ள பலருக்கு இல்லையே. ஐயோ, இந்து மதமே!

நீர் இறைக்கும் பகுதி, சோதனைச் சுரங்கம், நீர் இறைக்கும் பம்புகளை இயக்குவதற்காக நிறுவப்பட்டிருக்கும் சிறு மின்சார உற்பத்தி நிலையம், இவற்றையெல்லாம் பார்த்துவிட்டு, தகவல் அலுவலகம் வந்தோம். அங்கே, பழுப்பு நிலக்கரி, வெள்ளை, மஞ்சள் களிமண் இவற்றின் உபயோகங்களைப் பற்றிக் கூறினார்கள். இதற்கு முன் ஒன்றைக் கூறிவிடவேண்டும்.

நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத் திட்ட ஆரம்ப வேலைகளுக்காக, (ஆராய்ச்சி, பரிசோதனை) இதுவரை சென்னை சர்க்கார் ரூ 103-லட்சமும், இந்திய சர்க்கார் ரூ 65-லட்சமும் செலவிட்டிருக்கிறார்கள்!!

இப்போது மொத்தமாக 1012-பேர் வேலைசெய்கிறார்கள். (கெஜட் பதிவுபெற்ற அதிகாரிகள் 14. கெஜட் பதிவில்லாத அதிகாரிகள் 170. வேலை நிர்ணயிக்கப்பட்ட தொழிலாளர்கள் 228. உயர்ந்த தொழில் நுணுக்கம் கற்றவர்கள் 17. தொழில் கற்றவர்கள் 20. சிறிதளவு தொழிற் பயிற்சி

(14-ம் பக்கம் பார்க்க)

கண்ணீர் பேசுகிறது!

—அரங்கண்ணல்—

ஜப்பான் அழைக்கிறது, ஆஸ்திரேலியா அவசியம் வந்து போகக் கூடாதா, எனக் கேட்கிறது, அமெரிக்காவுக்குப் போக இருக்கிறார், இவரைப்போல யாருக்குமே வெளிநாடுகளிலிருந்து இப்படி அழைப்பு வந்ததில்லை, பிரிட்டனில நடைபெறும் பிரதமர்கள் மாநாட்டுக்குக்கூடப் போக வேண்டியுள்ளது — பாபம், இப்படிச் சுற்றினால் ஏது ஓய்வு அவருக்கு?— ஐரோப்பாவுக்கு எங்காவது ஓரிடத்துக்குப் போவதாயிருந்தால் அவசியம் இங்கே இறங்கிவிட்டுப் போகலாம் என்று எகிப்து நாசர் வேறு அன்பழைப்பு விடுக்கிறார்-இவ்வளவையும் சமாளிக்கும் அவர்தம் திறமையே திறமை! இவரைப்போல ஒருவரை என்றும் கண்டதுண்டோ! என்று இங்குள்ள ஏடுகள், இந்தியப் பிரதமர் நேரு வெளிநாடுகளிலிருந்து பெற்றிருக்கும் அழைப்புகளைக் குறித்து ஆனந்தப்படுகின்றன.

அவரும், வருகிற எந்த அழைப்பையும் நிராகரிப்பதில்லை; ஏற்றுக்கொள்ளத் தயங்குவதுமில்லை. நேரு பண்டிதர், ஆட்சித் தலைவரானது முதல், செய்திருக்கும் வெளிநாட்டுச் சுற்றுப் பயணங்களுக்கும் கணக்குவழக்கில்லை.

இப்படியெல்லாம் இவரை, வெளிநாடுகள்விரும்பி அழைப்பதுதத்தமது நாட்டிலுள்ள பிரச்னைகளைத் தீர்ப்பதற்காக அல்லஎன்பதைஅறிவோம். பக்கத்து நாடான பர்மா —இவரது பாசத்தையும் நேசத்தையும் பெற்றது -அங்கு இன்னும் கரீன்கள் தொல்லை அடங்கவில்லை. இந்தோனேஷியாவிலும் இன்னும் அரசியல் அலைகள் அடித்துக்கொண்டுதானே உள்ளன. அவ்வளவேன், சொந்த நாட்டில் தான் நேரு பண்டிதர், எந்தப்பிரச்னையில் வெற்றி கண்டுவிட்டார்? சிரிக்கிறதே இன்னும்காஷ்மீரத் தகராறு!

ஆகவே, இவரை அவர்கள் வரவேற்பது, ஏதோ தம் நாட்டிலேயிருக்கும் சிக்கல்களை விடுவிப்பார் என்பதற்கு அல்ல. இவருக்கு, ஒவ்வொரு நாட்டுக்கும்போய் வருகிற ஆசை இருப்பதைக் கண்டு அழைக்கிறார்கள். முகமலர்ந்து பேசி, இவரிடம், இந்தியா சம்பந்தமாக ஏதாவது ஒரு ஒப்பந்தத்தைப் பெறுகிறார்கள். இல்லையெனில், ஐசனோவர், எதற்காக இப்போது நேருவை அழைக்கிறார்!!

ஆனால், இவர் வெளிநாடுகளுக்குப் போவதையும் அங்கே பெறுகிற விருதுகளையும் காட்டி, "பார், பார்! எமது பண்டித நேருவுக்குக் கிடைக்கும் மரியாதைகளை" என்று இங்குள்ளவர்கள் குதூகலமடைகிறார்கள். இப்படி அவர்கள் ஆனந்தமடைகிற அதே சமயத்திலேயே, நேருவை எந்தெந்த நாட்டினர் வரவழைத்தார்களோ, அதே நாட்டார் பக்கத்திலிருக்கும் பர்மாவையும் பாகிஸ்தானையும்—ஏன்? இலங்கைப் பிரதமரையுங்கூட-அழைத்துக் கௌரவிக்காமலில்லை. முன்பு, நேரு அமெரிக்கா சென்று திரும்பியதும், பாகிஸ்தான் பிரதமரும் சென்று சிறப்போடுதான் வந்தார். அண்மையில் நேரு ரஷ்யா சென்றுவந்ததும், பர்மியப் பிரதமர் கூடத்தான் 'விஜயம்' செய்து விழாப் பெருமைகளுடன் திரும்பினார்.

ஆகவே. இப்படி வெளிநாடுகளுக்குச் சென்றுவருவதுமட்டும், ஒரு நாட்டுப் பிரதமரின் கீர்த்திக்குரிய விஷயமாகிவிடாது. நம்மைப் பொறுத்தளவில், நேரு பண்டிதர், நாட்டு விடுதலைக்காகப் பணியாற்றி பெற்றிருக்கும் தியாகத் தழும்புகளைவிட இந்தக் கித்தாப்புகள் வெகு சாதாரணம் என்போம். எங்கோ இருந்த பாதிரியார் மகாரியாஸ்கூட, விடுதலைப் போரில் ஈடுபட்டதும், உலக முழுதையும் கவரும் ஒப்பற்றவராகும்போது, உலகின் கவனத்தைக் கவருகிறார்எனும் அடைமொழியால் நேருவுக்குப் புகழ் எதுவும் கிடைத்துவிடப் போவதில்லை. அதுவும், இனிமேல்!!

எனினும், இங்குள்ள ஏடுகளும், நாடாளும் கட்சியினரும், நேரு பண்டிதரின் கீர்த்திக்குரிய காரியங்களில் ஒன்றாக இதனைப் பிரசாரம் செய்துவருகின்றனர்.

இன்று பிரதமராயிருக்கும் நேரு பண்டிதரின் இடத்தில், யார் போய் அமர்ந்தாலும் அவர்களுக்கும் இப்படி அழைப்புகள் வரத்தான் செய்யும்—வெளியிடங்களிலிருந்து. ஆகவே, இதனால் நேருமட்டுமே இந்தப் பாக்கியம் பெறுகிறவர் என்பது சரியான புகழுரையல்ல.

நேருவுக்கு, ஒவ்வொரு நாடும் அன்பழைப்பு விடுக்கிறது—இவரும் போகிறார் — புகழுரைகள் குவிக்கப்படுகின்றன—பெறுகிறார்.

இத்தனையும் பெற்றுக்கொண்டு சொந்த நாடு திரும்பியதும், அவர் மனதில் ஒரு நிம்மதியான திருப்தி ஏற்படமுடியுமா? ஒருக்காலும் முடியாது என்போம்.

இவருடைய ஆட்சிக்காலத்தில், மாபெரும் புரட்சி (இரத்தப் புரட்சியல்ல!) ஏற்பட்டது சமூகத்தில்; ஆண்டானில்லை, அடிமையில்லை; கண்ணீர் சிந்துகிறவன் இல்லை; கஷ்டமனுபவிக்கிறவன் கிடையாது; என்ற நிலை, நாட்டில் இல்லை. இதை எண்ணிப் பார்த்தால், இவருடைய மனம், துடிக்கத்தான்வேண்டும். பொதுப் பணி புரிந்தவர்களது மனம், துடிக்கத்தான் செய்யும்.

இந்த நெருக்கடியை ஊன்றிநோக்கிப் போக்கிடவேண்டிய காங்கிரஸ் கூடாரமோ, கனவான்களின் நடனக் கூடமாகி வருகிறது! அவர்களது இஷ்டப்படியே, எதையும் செய்ய வேண்டியதாகிறது!

இந்த அவலநிலையைப் போக்கும் ஆலோசனைகளைக் கூற வேண்டிய ஏடுகளோ, துதிபாடுவதிலும் துந்துபி முழக்குவதிலுமே காலத்தைக் கழிக்கின்றன.

அதில் ஒருவகைதான், நேருவின் வெளிநாட்டு விஜயம் குறித்து டமா

ரம் அடிப்பதும்! இப்படி நேருவின் புகழைப் பாடியே காலத்தைக் கழித்துவிடலாம் என்பது இவைகளின் எண்ணம்!

இத்தகையவர்களைப் பார்த்து, மகராசன் என்பவர் கேட்கிறார், என்ன பதிலளிப்பாள் அத்தாய்?—என்பதாக.

மகராசன், இலங்கையிலுள்ள வெள்ளவத்தை எனும் ஊரைச் சேர்ந்த தோழர். அவர் கேட்கிறார், என்ன பதிலளிப்பாள் அத்தாய்? அவர்களின் கதி என்ன இனிமேல்? — என்று. கேட்கிறார் நமக்குத்தீட்டியுள்ளகடிதமூலம்.

"நெல்லை மாவட்டம் கட்டையனூர் தோழர் அருணசலம் என்பவர் பிழைப்புக்காக இலங்கை வந்தவர். சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்தபடியால் உடன் தாய்நாடு திரும்பினால் உடல்நலமாகும் என்ற பெரும் நம்பிக்கையால் இங்குள்ள "பாரத தூதர்" காரியாலயத்துக்குச் சென்று, இந்தியா செல்வதற்கு அனுமதிச் சீட்டுக் கேட்டோம், அருணசலத்தையும் நேரில் கூட்டிக்கொண்டும், அவர் இந்தியாவில் பிறந்தவர்தான் என்பதற்கு இந்தியாவிலுள்ள திருச்செந்தூர் தாலுகா தாசில்தாருடைய அடையாள சர்டிபிகேட்டும் இடையன்விளை கிராமாதிகாரியுடைய சர்டிபிகேட்டும், அதிகாரியிடம் ஒப்படைத்தோம், அனுதாபத்துடன் கவனிக்க வேண்டிய அவர், சீறி விழுந்தார். 'நோய் எல்லோருக்கும் வரத்தான் செய்யும், ஆகையால் உடன் தரமுடியாது அனுமதிச் சீட்டு. ஒருமாதம் கழித்துதான் தரமுடியும்" என்று சொல்லிவிட்டார். ஒருமாதம் கழித்ததும் தபால் எழுதுவதாகவும், அதற்குப்பின் வந்து அனுமதிச் சீட்டு பெற்றுக்கொள்ளுமாறும் கண்டிப்பாகக் கூறிவிட்டார்.

ஒரு வாரத்துக்குள், அருணசலத்துக்கு நோய் அதிகமாகிவிடவே கொழும்பு மத்திய ஆஸ்பத்திரியில் கொண்டுபோய்ச் சேர்த்தோம். ஐந்தாறு நாட்களுக்கெல்லாம் அவருடைய உயிர் போய்விட்டது!

இளம் மனைவி, இரண்டுவயது நிரம்பிய இளம் குழந்தை இருவரும் அவர் இறக்கும்போது, தாய்நாட்டில்! அவர்களைக் காணவும் முடியாது, போய்விட்டார் அருணசலம்.

பெரும்பாலும் தமிழர்கள்தான் இலங்கையில் இருக்கிறார்கள். எங்களின் நிலையைக் கவனிக்க ஒரு பொறுப்பான உத்தியோகத்தில் தமிழர் கிடையாது. பெரும்பாலும் தாதாபாய்களும், நம்மீது அனுதாபமற்றவர்களும்தான் உள்ளார்கள். அதனால்தானே, இந்நிலை எமக்கு!

பொருள் தேடச்சென்ற கணவன் வருவார் வருவார் என்று ஏங்கியிருந்திருப்பார், அருணசலத்தின் துணைவி. அவர் மனம் இப்போது எப்படியிருக்கும்? 'அப்பா எங்கேம்மா!' என்று பச்சிளங் குழந்தை கேட்டால், அத்தாய், இனி என்ன பதிலளிப்பாள்? அவர்களின் கதி என்ன இனிமேல்?"

வெளிநாடு சென்ற குடும்பத் தலைவனின், கதி இது.

என்ன பதிலளிப்பாள் அத்தாய்?–தோழரின் கேள்வியினைப் பார்க்கும்போது, துயரம் குடைவது மட்டுமல்ல மழலைமொழிகலந்து குறுநகை நீட்டிக் கேள்விக்கணை பூட்டும் குழந்தைச் செல்வமும் அக்குழவியின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாது தவிக்கும் தாயும் மனக்கண்முன் தென்படுகிறார்கள்! ஐயகோ, அந்த அம்மணி நமது கூடப்பிறந்த சகோதரிகளில் ஒருத்தராக இருந்தால்...? எண்ண எரிமலையாகத்தான் செய்கிறது இதயம்.

நேரு பண்டிதரும் வெளிநாடு செல்கிறார்—நெறிகெட்ட தமிழ் மக்களும்தான் வெளிநாடு போகிறார்கள்—இப்படி வெளிநாடு சென்றிருப்போரைக் கண்காணிக்கும் இலாகா கூட நேருவின் கைவசம்தான் உள்ளது. ஆனால் அந்த இலாகாவின் தூதுவர் காரியாலயத்தில் ஒரு தமிழ் மகனுக்குக் கிடைக்கின்ற உதவி இது!

தோழர் மகராசன் மனம் வெதும்பித் தீட்டுகிறார், தமிழர்களாகிய எங்களுக்குத் தக்க உதவிகள் கிடைக்காமைக்குக் காரணம் தாதாபாய்களும் நம்மீது அனுதாபமற்றவர்களும் இருப்பதுதான், என்பதாக.

மலேயா, இலங்கை, பர்மாபோன்ற இடங்களில் சென்று வாழும் இந்தியர்களில், மிகப் பெரும்பாலோர் நம்மவர்கள்தான்.

ஆனால் அந்நாடுகளின் அரசுத் தூதுவர்களாயிருப்போர், நமது நலம் பேணுவோர் அல்ல! வடவர்கள் அல்லது சுகம் விரும்பிகள்!

இதைத்தான் சுட்டிக்காட்டுகிறார், தோழர். நாமும், நமது தேசீய நண்பர்களுக்கு எடுத்துரைத்து வருகிறோம், அடிக்கடி.

"செச்சே! இப்படி, வடநாட்டுக்காரர், தென்னாட்டுக்காரர் என்று துவேஷமூட்டுவதே இந்தக் கழகக்காரர்களுக்கு வேலை" என்று சீறக்கூடியவர்கள் தெரிகிறார்கள், கண்முன். அவர்களுக்கு இந்த வாரத்திய "ஆனந்த விகடன்" இதழைக் காட்ட விரும்புகிறோம். தோழியர் காந்திமதி தீட்டும், 'அமெரிக்கா அழைக்கிறது!' எனும் கட்டுரையில் குறிப்பிடுகிறார், இலண்டனில் நடைபெற்ற சம்பவத்தை; கேளுங்கள்:—

"...கதம்ப நிகழ்ச்சிகளில் ஒவ்வொரு மாகாணத்தவரும் தமக்கென்று ஒரு 'அயிட்டம்' கொடுக்குமாறு கேட்டதனால் எழுந்த தகராறுகள் தீர்ந்ததும் 'அயிட்டங்கள்' தொகுக்கப்பட்டன. எங்களுக்குள் ஒரு கமிட்டி சேர்மேனையும் தேர்ந்தெடுத்தோம்.

தமிழ் நாட்டிலிருந்தும் ஒரு 'அயிட்டம்' வந்தாகவேண்டும். நம்மில்தான் ஒரு ஆசிரியரே அங்கு போகிறாரே? அவருக்குத்தான் இது தெரியும்" என்று ஒரு மைசூர் வாசி பிரச்னையை எழுப்ப, "அதெல்லாம் வேண்டாம். நேரமும் போதாது. எல்லாம் வட இந்திய 'அயிட்டங்'களோடு நிறுத்திக்கொள்வோம்!" என்று ஒரு போடுபோட்டார் அந்த சர்வாதிகார சேர்மேன். சரியென்று அவர்களே எல்லாம் ஆமோதித்துக்கொண்டார்கள். பிறகு, சுதந்திர தினத்தன்று நிகழ்ச்சிகள் நடக்கையில் அந்த ஹால் மிகச் சிறியதாகையால், மற்ற வெள்ளைக்காரர்களுக்கு இடமளிக்க வேண்டி ஒரு அயிட்டத்திற்கும் பொறுப்பாயில்லாத என்போன்ற இந்தியர்களை, மற்ற இந்தியர்களே வெளியே தள்ளிவிட்டார்கள். அவ்வளவு ஒற்றுமை உணர்ச்சி நமக்குள்ளே!"

வெளிநாட்டுக்கு உழைத்து வாழச் செல்பவனுக்கு 'அருணசலங்களுக்கு' ஏற்படும் கதியே ஏற்படுகிறது! படித்துப் பட்டம்பெறப் போயிருப்பவர்களையும் தென்னாடு என்றால் வடநாட்டினர் அலட்சியமாகக் கருதுகிறார்கள்!!

இந்த நிலையில் "வடக்கும் தெற்கும் ஒன்றே! அப்படி இருப்பதுதான் நன்று. தேசம், சிதறுவதால் நன்மையுண்டோ? பெரிய நாடு என்பதிலிருக்கும் பெருமை வருமா!" என்று பேசப்படுகிறது.

கண்ணீர் சிந்தும் நிலையில் மக்கள் கஷ்டங்களை அனுபவிக்கும்போது, பெரிய நாடாவது! நிலப்பரப்பாவது!! என்று, இதோ ஒருவர் கேட்கிறார்;—

"ஒரு நாடு பரந்த எல்லையுள்ளதாகவும், சுபீட்சமுள்ளதாகவும் சொல்லப்படலாம். அதனால், ஏழை மனிதனின் கதி என்ன? அவனுடைய பிரச்னைகள் எந்தளவுக்குத் தீர்க்கப்பட்டிருக்கின்றன என்பதே முக்கியம். நாட்டில் வேலையின்மை பிரச்னையுமிருக்கிறது. குழந்தைகளிடமிருந்து சொற்ப நகைகளை அபகரித்ததமைக்காகத் தண்டனை பெற்றவர்களிடமிருந்து வரும் கருணை மனுக்களைப் பார்த்தால், அவர்கள் வேண்டுமென்று விரோதம் காரணமாக இந்தக் குற்றங்களைச் செய்யவில்லை எனத் தெரிகிறது. ஏழ்மைதான் இந்தக் குற்றங்களுக்குக் காரணம். தனி மனிதன் சுபீட்சமடையாதபோது, உலக சிறப்பு பற்றிப் பேசி என்ன பயன்?"

உலகச் சிறப்புப்பற்றிப் பேசி என்ன பயன்?—என்று கேட்கிறார்.

ஒரு நாடு. பரந்த எல்லையுள்ளதாகச் சொல்லப்படலாம். அதனால்

ஏழை மனிதனின் நிலைமை என்ன உயர்ந்திருக்கிறது? — இப்படிக் கேட்கிருர்.

கேட்பவர், நம்மவரல்ல; சென்னை மாநிலக் கவர்னர் பிரகாசா! ஆம், பிரகாசாதான் பேசியிருக்கிருர், மார்ச் 28ந் தேதி சென்னையில் நடைபெற்ற காமன்வெல்த் பார்லிமெண்டு சங்கத்தின் கிளைக்கூட்டமொன்றில்.

வெளிநாட்டில், நேருவுக்கு இருக்கும் பெருமைகளைப்பற்றி ஏடுகள் அப்படி எழுதுகின்றன.

"இதோ, அருணுசலம்" என்று காட்டுகிருர் மகராசன்! வடக்கு, தெற்கு ஒற்றுமை குறித்துப் பேசுபவர்களுக்கு, வெளிநாட்டில் தென்னுட்டார் கதி எப்படி உளது என்று விளக்குகிருர், தோழியர் காந்திமதி.

கவர்னர் பிரகாசா கேட்கிருர், தனி மனிதன் வாழமுடியாதபோது, நாடு எவ்வளவு பெரிதாக யிருந்துதான் என்ன பிரயோசனம்? ஏழைகளின் வாழ்வை உயர்த்த என்ன செய்துவிட்டோம், என்பதாக.

அப்படி எதுவும் செய்யப்படாததால் குற்றங்கள் பெருகுகின்றன-குழந்தைகளின் சங்கிலிகளைக்கூடத் திருடுகிருர்கள்— அப்படிப்பட்டவர்களிடமிருந்து எனக்கு வரும் கருணை மனுக்களைப் பார்க்கிறேன் — அவர்கள் வேண்டுமென்று செய்யவில்லை, வறுமைதான் அப்படிச் செய்யச் சொல்லுகிறது என்கிருர்.

கவர்னர் கூறிவிட்டாலென்ன, காட்டமுடியுமா ஒரு வறுமைக் காட்சியை, என்று கேட்கக்கூடியவர்களும் இருக்கிருர்கள் நாட்டில்.

அவர்களுக்கு இதோ ஒரு காட்சி; வறுமைமட்டுமல்ல, கோரமும் நிரம்பியது.

வர்ணிக்கத் தேவையில்லை, செய்தியைமட்டும் தருகிறேன்:

திருச்சி, ஜன். 1

> காந்தி மார்க்கட் அருகேயுள்ள மாரியம்மன் கோயிலில் சாத்தையா என்ற 23 வயது இளைஞன் ஒருவன், தனது அருமை அன்னை, சாத்தாயி அம்மனைக் குனிந்து கும்பிடுகையில் பட்டப் பகலில் அரிவாளால் வெட்டிக் கொலை செய்தான்.
>
> தாயாரிடம் அதிக அன்பு. லாரி ஷெட்டில் தினசரி ரூ. 2 அல்லது 3-சம்பாதித்து வந்தான் அவன்பேரில் பொருமை கொண்ட இதர கூலிகள், சாத்தையாவை ஒரு திருட்டு வழக்கில் சம்பந்தப்படுத்தி அவன் காதில் விழும்படி பேசிக் கொண்டிருந்தனராம். அதைக் கேட்ட சாத்தையா, தனக்கு வேலை போய்விட்டால், எப்படி 45 வயதான தன் தாயாரைக் காப்பாற்றுவது என்று கவலையடைந்து, தாயையும் கொன்றுவிட்டு, தானும் தற்கொலை செய்துகொள்ள எண்ணினுன். ரூ. 1-2-0 கொடுத்து நேற்று அவன் ஒரு அரிவாளையும் வாங்கினுன். சூடனை ஏற்றி மும்முறை வலம் வந்து வணங்கும்போது தாயை வெட்டினுன். திகைத்து நின்றவனை போலீசார் கைது செய்தார்கள்.

கதையல்ல, நமது நாட்டின் நிலை இது. இப்படியிருக்கிறது தனி மனிதனின் வாழ்க்கைப் போராட்டம்.

தாய் கொலை செய்யப்படுகிருள்— தளிர்மேனிக் குழந்தைகள் கிணற்றுக்குள் தள்ளப்படுகிருர்கள்—சந்துமுனைத் திருட்டு நடக்கிறது — சிசுக்களின் காதணிக்காக சிரம் திருகப்படுகிறது—இது, நம் நாடு.

கவர்னர், இவைகளைப் படம் பிடித்தாற்போல் காட்டுகிருர் — இவையனைத்தும் வறுமையால்தான் நடைபெறுகின்றன என்று.

தனி மனிதனின் கதி இப்படியிருக்கும்போது, மற்றப் பெருமைகளைப் பேசி என்ன பிரயோசனம்? ஒரு நாடு, சுபீட்சம் அடைந்திருக்கிறது என்ருல், அதில் வாழும் ஒவ்வொரு தனி மனிதனும் சுகமாக இருக்க வேண்டும் என்கிருர்.

அந்த நிலை நாட்டில் இல்லை என்பதைச் செய்திகள் காட்டுகின்றன.

உள் நாட்டில் சாத்தையாக்கள்! வெளிநாட்டில் அருணுசலங்கள்!

நேரு பண்டிதரின் எட்டாண்டு காங்கிரஸ் ஆட்சிக்குப் பிறகு, நாம் பெறுகிற நன்மைகள் இவை! எனினும், அவரது பெருமை அகில உலகிலும் விளங்குவதாக விளம்பரப் பீரங்கிகள் முழக்குகின்றன.

அந்தப் பெருமையால் தமிழ் மகனின் துயர வாழ்வைப் போக்க முடியவில்லை, இங்கு — வெளியிலும் நல்ல வாழ்வை வாங்கித்தர முடியவில்லை. தாய்கதறுகிருள் ஓரிடத்தில்! தாயைத் தனயனே கொலை செய்கிருன் இன்னேரிடத்தில்!

நாட்டின் நிலை, இது.

வடவர் பிடியில் சிக்கிக்கிடப்பதால் பெறும் பரிசுகள் இவை.

ஆள்வோருக்குத்தான் இவ்வளவு அலட்சியம் இருக்கிறது, வடநாட்டிலிருப்போர் தென்னுட்டாரைத் தமது சகோதரர்கள்போலக் கருதிக்கொண்டிருக்கிருர்கள் என்று கூறவும் வழியில்லை. இலண்டனைக் காட்டுகிருர், காந்திமதி.

இந்த நிலையில், ஏன் ஒரு பரந்த பூபாகம்? அது ஒன்ருகவே இருக்க வேண்டுமென்னும் பிடிவாதம்? அதை வலியுறுத்த ஒரு காங்கிரஸ் கட்சி, அதற்குத் தாசர்களாக நமது சகோதரர்கள்? என்று கேட்கிருேம். கண்ணீர் சிந்தியவண்ணம் கேட்கிருேம்.

★

தெரியவில்லையா தேசிகரும், வழுவூராரும்!

இசைமணிகளைக் கவுரவிப்பதில் டில்லி ஆசை காட்டி வருவதாகக் கூறப்படுகிறது.

திருமதி எம், எஸ், சுப்புலட்சுமிக்கு இதன் அறிகுறியாகவே 'பத்ம விபூஷண்' அளிக்கப்பட்டது என்றனர்.

டில்லி மேல் சபைக்கு அடையாற்று அருண்டேல் ருக்மணி அம்மையை நியமித்ததும், கலையினைக் கவுரவிப்பதற்காகவே எனக் கூறினர்.

இப்படி, கலைஞர்களைப் பாராட்டுவதும், பட்டங்கள் அளிப்பதும் வரவேற்கக்கூடியதுதான். கூத்தாடிகள், ஆட்டம் போடுகிறவர்கள், கச்சேரிக்காரர்கள் என்று கருதப்பட்டவர்களுக்கு மதிப்பையும் உயர் தகுதியும் உண்டாக்கி, அரசாங்கமே ஆதரவளிப்பது அவசியமான செயலேயாகும்.

ஆனால், இந்த ஆதரவும் பரிவும் ஒரு சாராருக்கேதான் சொந்தமா? தமக்கு வேண்டியவர்களுக்குமட்டுந்தான் அளிக்கப்படுமா?

ஒருமுறை ருக்மணி அருண்டேல், டில்லி மேல்சபையின் நியமன உறுப்பினராக இருந்துவிட்டார். அடுத்தபடி, வேறு யாராவது ஒருவருக்குத்தானே அந்த வாய்ப்பைத் தரவேண்டும்? நடனக்கலையின் 'பிதாக்கள்' என பந்தநல்லூர்ப் பெரியவர்களும், வழுவூரார் போன்ற கலைத் தந்தைகளும் இருக்கிருர்கள் இங்கே! அவர்களுடைய கலைத் திறமையோடு, அருண்டேல் அம்மையை ஒப்பிடவும் தயாராக இல்லை, நாம். பரத நாட்டியத்துக்கு அவர்கள்தான் முடிமன்னர்கள்! ஆனால், அவர்களில் எவரும் டில்லியின் கண்ணுக்குத் தெரியவில்லை. மீண்டும் ருக்மணி அம்மைக்கே அப்பதவி அளிக்கப்பட்டிருக்கிறது, டில்லியால்!

அதேபோல, குடியரசுத் தலைவரின் விருதைப் பெறும் 'பாக்கியத்தை' மீண்டும் எம், எஸ். எஸ். அம்மையே பெறுகிருர். இவருக்கு, கர்நாடக இசைக்காக அளிக்கப்படுகிறதாம்,

இசைத்துறையில் எம், எஸ். எஸ். மட்டும்தான் என்றல்ல; அவரைக் கவுரவிக்க பட்டம் வேறு அளிக்கப்பட்டிருக்கிறது. இந்நிலையில், ஏன் நமது எம். எம். தண்டபாணியாருக்குத் தரக்கூடாதா கவுரவத்தை? சி. எஸ், ஜயராமன் எந்தவிதத்திலே தகுதி குறைந்தவர்? திருப்பாம்பரம் பரம்பரை இல்லையா இங்கே? சித்தூரார் இல்லையா? கே. பி. சுந்தராம்பாளுக்கு யார் ஈடு? இன்னும் எத்தனையோபேர் இருக்கிருர்களே! ஏன் அளிக்கக்கூடாது? நாடகத்துறையில் கவுரவிக்க, வடநாட்டு பிருதிவிராஜ் கபூரைத் தவிர வேறுயாரும் அகப்படவில்லையாம், என்ன விந்தை பாருங்கள்! நமது டி. கே. சண்முகம் இல்லையா? எம். ஆர். ராதா போன்றவர்கள்கூட இருக்கட்டும், நவாப் இராஜமாணிக்கத்திற்காவது அளிக்கக்கூடாதா, அந்த விருதை!

இவர்கள் எல்லாம் எங்கே தென்படுகிருர்கள், நேருவின் கண்ணுக்கு? வாய்ப்புள்ள கூட்டம், மீண்டும் மீண்டும் போற்றப்படுகிறது. புகழப்படுகிறது.

தீர்ந்துபோய்விட்டதாம்!

தேவிகுளம், பீர்மேடு நமக்குக் கிடையாது—என்று, நம்மையாளும் காமராஜ் சர்க்கார் முடிவுசெய்துவிட்டது.

"தேவிகுளம், பீர்மேடு எமக்குச் சொந்தம்'! என்று இதே காங்கிரஸ் சில திங்களுக்கு முன்பு சட்டசபையிலே கர்ஜித்தது. பக்தவத்சலம், பழந்தமிழ் வீரனைப்போல உரிமைக் குரல் எழுப்பினார். சுப்ரமணியம், மாண்ட பாண்டியன் மீண்டதுபோல முரசொலித்தார். காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள், "தேவிகுளத்தை விடுவதா? பீர்மேடு போவதா?" என்று கேட்டார்கள்.

இப்போது, எதிர்த்து வாக்கு அளித்திருக்கின்றனர், தமிழ்நாட்டுக் காங்கிரசின் எம். எல். ஏ.க்கள்.

காரணம்?

டில்லி கட்டளையிட்டதாம், இப்படித்தான் செய்யவேண்டுமென்று!

"மக்கள் அபிப்பிராயம் அறியாது, எந்தக் காரியமும் செய்யமாட்டேன். ஒரு சில தலைவர்களின் முடிவைமட்டும் ஏற்று எந்தக் காரியங்களையும் செய்வதென்பது இயலாது" இவ்வண்ணம் முதலமைச்சர் காமராஜ் முழக்கினார். ஆனால், இதோ சட்டசபையில் அவருடைய கட்சியின்குரல் ஒலிக்கிறது. "இவ்விஷயத்தில் தமிழ்மக்கள்தான் முடிவுசெய்யவேண்டுமென்பது தவறான கருத்து. தலைவர்கள் ஒரு முடிவு செய்துவிட்டார்கள். அதை ஏற்றுக்கொள்வதுதான் நம்முடைய கடமை" என்பதாக.

மக்கள் கருத்துப்படி நடப்பேன் என்று பேசிய காமராஜர் அதோ தெரிகிறார்.

எமது டில்லித் தலைவர்களின் கட்டளைப்படியே நடப்போம் என்று கூறிடும் காமராஜர் இதோ தெரிகிறார்!

"தலைவர்கள் முடிவு கூறிவிட்டால் என்ன? அதுதான் வேதவாக்கா! என் தாய்மொழி பேசும் எல்லைக்கு வரும் எந்தவித இடையூறுகளையும் சகிக்கமாட்டேன். இந்த விஷயத்தில், கட்சியாவது, கத்திரிக்காயாவது!" என்று கர்ஜிக்கும் காட்கில், அதோ, மராட்டியத்தில்.

காலில் விழுகிறோம், என்று தண்டனிடும் தியாகிகள், தமிழகத்தில்.

நேரு பண்டிதரின் கட்டளையை ஏற்க முடியாது, மராட்டிய மக்களுக்கிழைக்கப்படும் அநீதியை ஒரு போதும் சகிக்கமாட்டோம், என்று கூறி 25 காங்கிரஸ் எம். எல். ஏ-க்கள், இரு தினங்களுக்கு முன் ராஜினாமாவை வீசி எறிந்திருக்கிறார்கள், அங்கே.

இங்கே, "காமராஜ் தயவு கிடைக்காவிடில் என்ன செய்வது?" எனும் அச்சமோ என்னவோ, கைதூக்கிவிட்டு வந்திருக்கிறார்கள் நமது காங்கிரஸ் எம். எல். ஏ-க்கள்.

ஒவ்வொரு விஷயத்துக்கும் டில்லியே முடிவு கூறுவதென்றால், எதற்காக இங்கே ஒரு சட்டசபை? மந்திரி சபை?

"தேவிகுளம், பீர்மேடு விஷயத்தை எப்படி முடிவு செய்வது—மலையாளிகள் தமக்குச் சொந்தமென்கிறார்கள்; நாம், நமக்குச் சொந்தமென்கிறோம். இதில், எப்படி முடிவு ஏற்படுவது? அதனால்தான், நமக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது, என்று கருதிய போதிலும் இம் முடிவை ஏற்றுக்கொள்ள மனம் ஒப்பினோம்" என்கிறார் தோழர் சுப்பிரமணியம்.

நமக்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கின்ற போதிலும்!—என்கிறார், அமைச்சர்.

வேறு வழியில்லை, அதனால் டில்லியின் முடிவை ஏற்றோம் — என்கிறார், சட்டசபையில்.

ஏன், வேறு வழியில்லை? இப்படி இவர்கள் கூறுவார்களென்பதால் தானே சர்வகட்சிக் கூட்டணியினர், 'எல்லைக் கமிஷன்' நியமிக்க வேண்டும், பொது வாக்கெடுப்பு எடுத்து முடிவு செய்யலாம், என்றனர்.

ஜனநாயகத்தில், இருதரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வழிகள் இவைதானே! மறுக்க முடியுமா, யாராவது!

இந்த அரிய முறை இருக்கின்ற பொழுது, இதை அமுல் நடத்தும்படி டில்லி சர்க்காரை வலியுறுத்த வேண்டிய காமராஜர், எதற்காக 'ததாஸ்து' போடவேண்டும்?

"தேவிகுளம் பீர்மேடு தீர்ந்துபோனபிரச்னை. எல்லைக் கமிஷன் ஆலோசிக்கும் என்கிற பிரமை வேண்டாம்" என்கிறார், சுப்ரமணியம்.

தீர்ந்துபோய்விட்டதாம்! நாடே இந்தப் பிரச்னைக்காக ஒரு நாள் அர்த்தால் நடாத்தி, மக்களின் ஏகோபித்த விருப்பத்தை எடுத்துக் காட்டிற்று.

திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும் என்றாலாவது, சிலர் பழியை வீசித்தப்பமுயலலாம்! தமிழரசுக்கழகம் கேட்டது; பலவிதங்களில் இந்திய யூனியன் அரசுடன் இணைந்து போகலாம் எனக் கூறும் கம்யூனிஸ்டுக் கட்சி, கர்ஜிக்கிறது; சோஷியலிஸ்டுகள், பிரஜா கட்சியினர், தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் எல்லாம் ஒன்று சேர்ந்து வலியுறுத்துகின்றன. அவை யாவும், தூசுக்குச் சமானமெனக் கருதப்படுகிறது! பிரச்னை, தீர்ந்துபோய்விட்டதாம்.

"ஜனநாயகயுகத்தில், பலமிக்க எதிர்க்கட்சி இயங்கவேண்டியது அவசியம். அந்த எதிர்க்கட்சிகள் கூறும் கருத்துக்களையும், ஆலோசனைகளையும் புரிந்துகொள்ளவேண்டும், ஆட்சி நடத்துபவர்கள். அவர்கள் கூறுவதை நன்குகப் பரிசீலனைசெய்து, பின்னரே சர்க்கார் எந்த முடிவையும் எடுக்கவேண்டும். அதுதான், நாட்டுக்கு நல்லது"

மார்ச் 15-ந்தேதி இராயபுரம் கண்ணப்பநாயனார் கல்விக் கூடத்திலே நாட்டுக்கு எது நல்லது என்பதை இவ்வண்ணம் விளக்கிக் காட்டினார் தோழர் காமராஜ்!

எதிர்க்கட்சிகளின்கோரிக்கைகளைப் புரிந்துகொள்ள வேண்டுவது, ஜன நாயகத்துக்கு அவசியம் என்கிறார், காமராஜ், ஆனால், நமது அருமந்த அமைச்சர் சுப்ரமணியம் சட்டசபையில் தாறுமாறாக, திராவிடநாடு பிரச்னை குறித்து உளறவே, குறிக்கிட்டு கோவிந்தசாமி விளக்கம் தந்தபோது உரைக்கிறார், "திராவிடநாடு கேட்பதிலுள்ள பொருளையோ அல்லது ஏன் கேட்கப்படுகிறது என்பதையோ நான் அறிந்துகொள்ள விரும்பவில்லை" என்பதாக. இவர் அமைச்சர்! இந்த அமைச்சர் தெரிவிக்கிறார், பிரச்னை தீர்ந்துபோய்விட்டது என்று!!

"நமக்கு அநியாயநிலை என்றாலும் அதையும் சகித்துக்கொண்டு, அமைதியாக நடப்பவர்கள் நாம் என்பதை நிரூபித்துக்காட்ட வேண்டும்" என்கிறார்.

தேவிகுளம், பீர்மேடு விஷயத்தில் தான் டில்லி இட்டது கட்டளையென்கிறார்கள்—சென்னையின் பெயரை, 'தமிழ்நாடு' அல்லது 'தமிழகம்' என்று வைக்கத் தடையாயிருப்பது யார்?

அமைச்சர்சுப்பிரமணியம்அறிவிக்கிறார், தமிழ்நாடு என்கிற பெயர் உலகத்துக்குப் புரியாதாம்! ஒப்பற்ற இந்த அறிஞர் கூறுகிறார். பாரதம் என்கிற பெயர், எல்லோருக்கும் விளங்கிய பெயரா! செந்தமிழின் சுவை மணக்க நந்தமிழின் புகழ் பரப்ப ஒரு பெயர் இருந்தால் என்ன? தமிழ்நாடு என்றோ தமிழகம் என்றோ அழைத்தால் என்ன? நாட்டுப்புறத்துக்குப் போய் உன் மாகாணம் என்னவென்றால், உடனே அமைச்சர் கூறுகிறாரே உலகமெங்கும் தெரிந்தது என்பதாக அந்த 'மெட்ராஸ்' என்கிற பெயரைச் சொல்லும் கிராமவாசிகளைக் காட்ட முடியுமா இவர்களால்?

உலகத்துக்கு தெரிந்த பெயராம்! ஒரு காலத்தில் இஸ்ரேல் என்கிற பெயரே உலகத்துக்குத் தெரியாத பெயர்தான்; பாகிஸ்தான் என்பதுகூடப் புரியாத புதுப் பெயர்தான். அப்படியிருக்கும்போது, தமிழ்நாடு என்பதுதானா புரியாது, தெரியாது! இந்த விளக்கத்தை ஒரு இந்திக்காரன் சொன்னால் ஏற்றுக்கொள்ளலாம், சமஸ்கிருதவாதி கூறினால் அவனது மனதைப் புரிந்து கொள்ளவும் இயலும். தமிழ் பேசும் மந்திரிகள்—அதிலும் தமிழைத் தவிர வேறு மொழி கற்றறியா தோழர் காமராஜரை முதல்வராகக்கொண்ட சர்க்காரா சொல்வது?

வெட்கம் என்பர் இதனை! தமிழ்த் துரோகிகள் என்பர் இவர்களை!!

★

9-ம் பக்கத் தொடர்ச்சி

யுடையவர்கள் 71. தொழிற்பயிற்சி இல்லாத தொழிலாளர்கள் 451. அவ்வப்போதைய எடுபிடி வேலைகளைக் கவனிப்போர் 41. சுரங்கத் திட்டம் அமுலாகும்போது சுமார் 7000-பேர்வரை வேலைபெறமுடியும் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

பழுப்பு நிலக்கரியில் உள்ள எரிபொருள் திண்மை சுமார் 50-சதவிகிதம்தான். இந்த எரிபொருள், வடநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிற நிலக்கரியைக் காட்டிலும், மலிவானதாக இருக்க முடியும்.

காடுகளை அழித்து அல்லவா நாம் இப்போது வீடுகளில் எரிபொருளாகக் கரி, விறகு என்று உபயோகிக்கிறோம். பழுப்பு நிலக்கரி கிடைக்கத் துவங்கினால், எரிபொருளுக்காக, நாம் காடுகளை அழிக்கத் தேவை இல்லை. உபயோகிக்கும் மரக் கரிக்கு பதிலாக அதைக்காட்டிலும் மலிவான விலையில் பழுப்பு நிலக்கரி கிடைக்கும். புகையாமல் நின்று எரியும் தன்மையுடைய கரி.

இந்தக் கரியை, எரிபொருளாகக் கொண்டுதான், நெய்வேலியில் ஒரு பெரும் மின்சார பத்திர நிலையம் துவங்கப் போகிறார்கள்.

சேலத்தில் கிடைக்கும் இரும்புக் கனியைத், தோண்டி கல்லோடு கலந்திருக்கும் இரும்புக் கட்டிகளை உடைத்துத் தூளாக்கி, காந்தக் கட்டையால், இரும்புத் தூளைத் தனியாகப் பிரிக்கவேண்டும். அப்படிப் பிரிக்கப்படும் இரும்புத் தூளுக்கு 'Concentrated Ore powder' என்று பெயர். இந்தத் தூளை, ரசாயன மாறுதலுக்கு உட்படுத்தப்பட்டு, கெட்டியாக்கப்பட்ட நெய்வேலி நிலக்கரியைக் கொண்டு Low Shaft Furnace என்ற உலையில் உருக்கினால் Pig Iron என்ற இரும்பு உருக்குக் கிடைக்கும்.

நெய்வேலியில் உள்ள பரிசோதனைச்சாலையில் சேலத்திலிருந்து, வெட்டி எடுத்துவந்த இரும்புக்கனியை, நெய்வேலி நிலக்கரியைக்கொண்டே Pig Iron ஆக உருவாக்கியிருக்கிறார்கள்.

நிலக்கரியில் உள்ள எரிபொருள் நீங்கலாக உள்ள இதர பொருள்களின் உபயோகம் என்ன?

'மான்டன் வாக்ஸ்' என்ற பொருள் வெடிமருந்துகள், குண்டுகளின் மேல் பூச்சுக்கு உதவக் கூடியது. பூமிக்கடியில் போடப்படும் மின்சாரக் கம்பிகளின் மேல் பூசுவதற்கு உபயோகிக்கப்படும் மற்றும் இதைக் கொண்டு, ஷூ பாலிஷ், வார்னிஷ் முதலியனவும் தயாரிக்க முடியும்,

நிலக்கரியிலிருந்து பிரித்தெடுக்கப் படும் மற்றொரு பொருளான 'பிட்ச்' என்பது, சாலைகள் மேல் பரப்ப உபயோகப்படும் தார் செய்ய உதவும். துவக்கத்திலேயே எரிபொருளைப் பிரிக்கும்போது கிடைக்கும் தாரிலிருந்து Light oil, Heavy oil, Fuel oil, Petrol முதலியன உற்பத்தி செய்ய முடியும்.

கரியிலிருந்து கிடைக்கும் மற்றொரு பொருள் 'மார்கொசைட்' என்பதாகும். இதிலிருந்து கந்தகம் கிடைக்கும்.

நிலக்கரிப் படிவங்களுக்கு மேலே கிடைக்கும் பலவகை மண்களின் உபயோகம் யாது?

மஞ்சள் களிமண் சீனாவில் தயாராகும் பீங்கான் பாத்திரங்கள் போன்ற பாத்திரங்கள் செய்யப் பயன்படக்கூடியதாகும். இந்த மஞ்சள் களிமண்ணை சீனக் களிமண் என்றும் சொல்லுகிறார்கள்.

வெள்ளைக் களிமண், டன் ஒன்று 100 முதல் 150 ரூபாய் வரை விலையுள்ள Fire Clay யாக உபயோகப் படுகிறது.

மற்றுமொன்று, நிலக்கரிப் படிவங்களுக்குக் கீழே உள்ள நீரோட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்காக இடைவிடாது தண்ணீரை இறைக்கப்போகிறார்களல்லவா? அந்தத் தண்ணீரை, மின்சார உற்பத்திக்குப் பயன்படுத்தப் போகிறார்கள். அப்போதும் மிஞ்சக்கூடிய நீர், வறண்டுகிடக்கும் தென்னாற்காடு மாவட்டத்திற்கு பாசனத்திற்காகப் பயன்படும். இப்போதோ பரிசோதனைக்காக இறைக்கப்படும் தண்ணீர், வெட்டப்பட்டுள்ள வாய்க்கால் வழியாக, அடுத்துள்ள கிராமங்களில் ஏரிகளில் நிரப்பப் பட்டு, பாசனத்திற்காகப் பயன் படுத்தப்படுவதாகத்தெரிவித்தார்கள். இப்போது நெய்வேலியைத் திராவிடத் தாயின் மடியில் புதைந்திருக்கும் பொற்குவியல் என்பதை மிகையானதெனக் கொள்ள முடியுமா?

இந்தப் பொற்குவியல் தாயகத்திற்குப் பயன்படுவது, கோலோச்சும் குணாளர்களின் திறமையையும், நல்லெண்ணத்தையும் பொறுத்ததாகும்.

★

6-ம் பக்கத் தொடர்ச்சி

ஒருவர்:-இதுபோலப் பேரம் பேசப் போறது தெரிஞ்சிருந்தா... இவரை அழைத்துக்கொண்டு வந்திருக்கமாட்டோம்.

அவர்:-பரவாயில்லே...... எனக்கு ரொம்ப நாளா இவரைப் பார்க்க வேணும்னு எண்ணம். பணம் கொடுத்தாத்தானா! அது அவர் சவுகரியம்... பத்து கொடுக்கற வங்க 'லிஸ்டு' ஒண்ணு பண்டித நேருவுக்குப் போவுது... அதிலே இவர் பெயர் இருக்கவேணும் என்பது என் ஆசை...

சீமான்:-அப்படிங்களா... நீங்க உத்தரவு போடுங்க... நான் மீறவா போறேன்... ஐயா! கணக்கப் பிள்ளை!!

[கணக்கப்பிள்ளை வருகிறார். அவரிடம் இரகசியமாகச் சீமான் பேசுகிறார். அவர் போன பிறகு, சமயல் ஐயர் வருகிறார். 'பாதாம்கீர்' அனைவருக்கும் தரப் படுகிறது.]

எங்கு? எப்போது? என்றெல்லாம் கேட்டு என்னைச் சங்கடத்தில் இழுத்துவிடாதே தம்பி. ஆவடியில் கூடினரே காங்கிரசார், அப்போது, இதுபோலெல்லாம் பணம் திரட்ட முடிந்தது — எளிதாக. ஆவடியிலிருந்து இப்போது அமிர்தசரஸ் சென்றுள்ளனர்.

ஆளும் கட்சியாகக் காங்கிரஸ் மாறுவதற்கு முன்பேகூட, தேசீயப் போராட்டம் என்பது, 'இந்திய முதலாளிகட்கு'ச் சாதகமான சூழ்நிலையை உண்டாக்கும் என்பதை அறிந்த 'பிர்லாக்கள்', காங்கிரசின் போராட்டங்கள், கிளர்ச்சிகள், தேர்தல்கள், மாநாடுகள், ஆகிய வற்றுக்கெல்லாம் தாராளமாகப் பணம் கொடுத்தனர்; விதைக்கிறோம், அறுவடை ஆனந்தமாகப் பிறகு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன்.

பிர்லா என்று நினைக்கிறேன், ஒரு சமயம், காந்தியாருக்கு ஒரு கடிதமும், கையொப்பமிட்ட ஆனால் தொகைமட்டும் குறிப்பிடாத 'செக்'கும் அனுப்பினாராம்.

மகாத்மாஜீ! காங்கிரஸ் பணிக்காக, என்னிடம் தாங்கள் பணம் கேட்பதுபோல நான் நேற்று ஒரு கனவு கண்டேன்; உள்ளம் உருகி விட்டது; தொகை இவ்வளவு என்று தாங்கள், கனவில் குறிப்பிடவில்லை; எனவே நான், தொகை குறிக்காமல், 'செக்' அனுப்பியிருக்கிறேன், பெற்றுக்கொண்டு, தாங்கள் விரும்பும் தொகையை எழுதிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறேன் என்பதாக அவர் எழுதி இருந்தார் என்று அந்த நாட்களில் பத்திரிகைகளில் 'சேதி' வெளியிட்டார்கள்.

ஆலை அரசர்களும், வணிகக் கோமான்களும், சிற்றரசர்களும் சீமான்களும் பாலூட்டி வளர்த்தனர், பாரத மாதாவின் தளைகள் உடைபடவேண்டும் என்ற தூய நோக்கத்துக்காக அல்ல, வெள்ளையர் வெளியேற்றப்பட்டால், நாடு தங்கள் வேட்டைக் காடு ஆகும் என்ற 'நப்பாசையால்'. அந்த ஆசையும் அவர்கட்கு ஈடேறிற்று; காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தது, முதலாளிகட்கு நல்லதோர் பாதுகாப்பாக அமைந்துவிட்டது; மாளிகை வாசிகள் 'கூர்க்கா'வுக்குப் பணம் கொடுத்து, பாதுகாப்புத் தேடிக் கொள்வதுபோல, இப்போது, முதலாளிகள், ஆவடி, அமிர்தசரஸ் ஆகிய நிகழ்ச்சிகளுக்குத தாராளமாகவும் ஏராளமாகவும் நன்கொடைகளைக் கொடுத்து, தங்கள் ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்கிறார்கள்.

பணக்காரரிடமிருந்து பணமும் ஏழைகளிடமிருந்து ஓட்டுகளும், திரட்டிக் கொள்வதிலே, நேரு பண்டிதர் நிகரற்ற சமர்த்தர் என்று டாக்டர் லோகியா சென்னையில் ஒரு கூட்டத்தில் சொன்னார். உண்மை! நேரு, அவருடைய தரத்துக்குத் தக்க அளவில் திரட்டுகிறார் என்றால், மற்ற காங்கிரஸ் தலைவர்கள் அவரவர் தரத்துக்குத் தக்கபடி, பணம் திரட்டும் பக்குவமும், பயிற்சியும், திறமும் பெற்றுள்ளனர்.

தேவைப்படும் வாழை இலை பூராவும், நான் அனுப்பிவைக்கிறேன்.

என்னிடம் உள்ள சவுக்குத் தோப்புகளை, நான் தந்துவிடுகிறேன்.

சீரகச் சம்பா நூறு வண்டி அனுப்பிவைக்கிறேன்.

தலைவர்களுக்குத் தேவைப்படும் மாலைகள் முழுவதும் நான் அனுப்பி வைக்கிறேன்!

இவ்விதம், ஆவடிக்குப் போட்டி போட்டுக்கொண்டு அனுப்பினர்— அறுபட்ட விரலுக்குச் சுண்ணாம்பு தராதவர்கள், எச்சிற் கையால் காகம் ஓட்டாதவர்கள் என்று சூழ இருப்போரால் ஏளனமாகப் பேசப் பட்டவர்கள். திடீரென்று கருணையும் கனிவும், காதலும், கனதனவான்கள் உள்ளத்தில் ஊற்றெடுத்துவிட்டது என்பதல்ல பொருள் — துரைத்தனம் இன்று காந்தி குல்லாய்க்காரரிடம் இருப்பது தெரிவதாலும், காங்கிரஸ் கட்சியின் இரும்புப் பிடியினால் தான், காலம் உசுப்பிவிடும் புரட்சி தடுத்துவைக்கப்பட்டிருக்கிறது என்பது தெரிவதாலும்!

காங்கிரஸ் மாநாடு, இதன் பயனாக வைரம் ஒளிவிடும் கண்காட்சியாகிறது! தொட்டால் துவண்டு விடும் தோகையாள், மலர் பட்டால் சிவந்துவிடும் மென் பாதத்தாள், கெண்டை மீனும் மானும் கண்டு நாணுகின்ற விழியாள், கற்கண்டு பாகு மொழியாள், என்றெல்லாம் சொல்லத்தக்க சீமாட்டிகளும், அவர்தமை 'உடைமை' கொண்ட உரிமையாளர்களும், தமது ப்யூக்கிலும் பாக்கார்டிலும், ரோல்சிலும் கெடிலாக்கிலும், வந்திருந்து மகிழ்வதற்கு இன்று கிடைக்கும் மன்றமே, காங்கிரஸ்தான்! அங்குதான் ஆலை அரசர்கள் ஆங்கிலநாட்டுப் பிரபுக்களையும், அவர்களை ஆட்டிப்

சிலம்பு நாடக மன்றம் அளிக்கும்
சிந்தனை நாடகம்

அண்ணாதுரை
தலைமையில்

பன்மொழிப் புலவர்
அறிஞர் கா. அப்பாதுரையின்
அழகோவியம்

"காற்றும் மழையும்"

வசனம் இரா. மணிவேந்தன்
பாடல்கள் கவிஞர் கண்ணதாசன்

22-4-56 ஞாயிறு மாலை 6-30-க்கு

சென்னை ஒற்றவாடை தியேட்டரில்

கவிஞர் கண்ணதாசன், வளையாபதி முத்துகிருஷ்ணன், எஸ். எஸ். பி. லிங்கம், வனிதா, காந்தா, மல்லிகா ஆகியோர் நடிக்கின்றனர்.

கட்டணம் 3, 2, 1, 0-8-0

டிக்கட்டுகள் கிடைக்குமிடம்:
13. அருணாசல ஆச்சாரிதெரு சேப்பாக்கம்
N. கிருட்டினன்
செயலாளர்.

படைக்கும் அமெரிக்க நாட்டு டாலர் பூபதிகளையும் கண்டு பேசவும், கூட்டாளிகளாகக் கொள்ளவும் முடிகிறது.

"யார் அந்த ஒய்யாரி? அணிந்துள்ள உடை என்ன, தங்கநிறக் கண்ணாடியோ, அல்லது அன்றலர்ந்த மலர் கொண்டு தொடுக்கப்பட்டதோ என்று கேட்டிடவும், "யார்? அந்த இளமங்கையா? நேப்பாள நாட்டு மன்னரின் பரிவாரத்தில் கண்டேன் இந்தக்காரிகையை ......என்று பதில் பெறவும், இன்றுள்ள ஒரே எழிலூர் காங்கிரஸ் மாநாடுதான்! கோடீஸ்வரர்களும் இலட்சாதிபதிகளும், பட்டத்தை விட்டுவிட்டுப் படாடோபத்தைமட்டும் கெட்டியாகப் பற்றிக்கொண்டுள்ள 'ராஜாக்களும்' கொலுவிருக்கக் கிடைக்கும் ஒரே இடம், காங்கிரஸ் மாநாடுதான்!!

உடற்கனத்தைக் குறைத்துக் கொள்ளவும், உள்ளத்துக்கு உல்லாசம் தேடவும், சுவிட்சர்லந்துக்கும் பாரிசுக்கும்சென்றுவரும் சுந்தரிகளையும், கல்வித் துறை ஆராய்ச்சிக்குக் கனடாவுக்கும், செல்வத்துறை ஆராய்ச்சிக்கு அமெரிக்காவுக்கும் சென்று வந்தேன் என்று கூறிடும் செல்லப் பிள்ளைகளையும் காணவேண்டுமானால், காங்கிரஸ் மாநாடுகளில் தான் முடியும்.

அறுபதுக்கு ஆறோ ஏழோ தான் குறைவு என்றார்கள் இந்த அம்மைக்கு; இப்போது உடையைப் பார்த்தால் இருபதாண்டு இளமங்கைபோலிருக்கிறது, நடையோ முப்பதுக்கு மேலிராது என்று மதிப்பிட வைக்கிறது, அலங்காரமோ, நட்சத்திரங்கள் கண்டு பொறாமைபடத்தக்க விதமாக இருக்கிறது, எப்படி இந்த எழிலும் இளமையும் பெற முடிந்தது என்று கேட்க, இவ்வளவு தானே உனக்குத் தெரிந்தது நண்பா! அந்த நளினியின் புன்னகையைக் கண்டால் என்ன சொல்வாயோ. உடலழகைக் கண்டே இத்துணை ஆச்சரியமடைகிறாய், உள்ளத்திலே ஊற்றெடுத்துக் கிடக்கும் பரோபகார சிந்தனையைச் சிறிதளவேனும் அறிந்திடும் வாய்ப்பினைப் பெற்றால், ஏதேது எண்ணுவயோ! இவ்வளவு எழிலும் இளமையும், முதுமையில உழன்றுகிடந்த இந்தச் சீமாட்டிக்குக் கிடைத்ததற்குக் காரணம் கீழ்நாட்டு ஓவியம்பற்றி மேனாட்டாருக்கு அறிவிக்க இவர்கள் ஈராண்டுக்காலம் அமெரிக்கா சென்றுவந்ததுதான்! அங்கு ஓர் மருத்துவ விடுதியில், சருகு, தளிராக்கப்படுகிறதாம்!—என்று பதில் பெறவுமான உற்சாக உரையாடல்கள் கேட்கவேண்டுமானால், காங்கிரஸ் மாநாட்டிலேதான் முடியும். காங்கிரஸ் மாநாடு என்பது உல்லாச விழா ஆகிவிட்டது; எனவே வாழ்க்கைச் சல்லாபம் பெறும் செல்வக்குடியினர், அங்குசென்று ஆனந்தம் காண்கின்றனர்.

நான் உன்னை, வரண்ட தலையினர் இருண்ட கண்ணினர், வாழ்க்கைச் சுமையைத் தாங்கித் தாங்கி வளைந்து போயுள்ள நொந்த உள்ளத்தினர், இவர்கள் கூடிடும், மாநாட்டுக்கு அழைக்கிறேன்! இங்கு நீ பட்டுப் பூச்சிகளைக் காண முடியாது, படாடோபச் சீமான்கள் கிடைக்கமாட்டார்கள்!! ஆலைக் கணக்கும் சோலைக் கணக்கும் கூட்டிக் கூட்டிக் களித்திடும் கனவான் உன் கண்ணில் படமாட்டார்!! சல்லாபப் பேச்சிலே வல்லவரும், சாகச வீச்சிலே வெல்பவரும், இங்கு உலவமாட்டார்கள். இங்கு கண்களை மயக்கி, கருத்தினைக் குழப்பி, கால் தடுமாறவும் பேச்சுக் குழறவும் ஆகும்படியான நிலையை மூட்டிவிடும் நளினிகளின் நாட்டிய விருந்தை எதிர்பார்த்தால் ஏமாற்றம் அடைவாய், சதங்கைச் சத்தம், அதனுடன் போட்டியிடும் வளை ஒலி, அதற்குக் காரணமான மோகனப் பூசல், இவை உன் செவிக்கு விருந்தாகக் கிடைக்குமென்று எதிர்பார்த்திடாதே!

திருச்சியில், நடைபெறும் மாநில மாநாடு, திக்கற்றோருக்கு ஒரு திட்டம் காட்டும் திருச்சபை — வாழ்விழந்தோருக்கு வழிகாட்ட எடுத்துக்கொள்ளப்படும் ஒரு நன்முயற்சி—வழி தவறியோருக்கு நன்னெறி பற்றிய விளக்கமளித்திடும் முயற்சி!

ஒளி இழந்த கண்ணினரே! நமது முன்னோர் வாழ்ந்த வகை கூறிடக் கேண்மின்! பிறகு உமது கண்களிலே ஓர் புத்தொளி பூத்திடும்!!—என்று எடுத்தியம்பும் ஓர் மருத்துவக் கூடம்—இம்மாநாடு.

மகனே! மகனே! அருமந்த மகனே! என் ஆசை மகனே!! பெற்றேனே பாவி நான் உன்னை, பாலூட்டிச்சீராட்டி வளர்த்தேனே, உன் மழலை கேட்டு மகிழ்ந்தேனே, துள்ளித்திரியும் பிள்ளைப் பருவத்திலே உன்னைக் கண்டு 'கர்வம்' கூடக் கொண்டேன், அந்தோ மகனே! அரும்பு மீசை கொண்டவனாய், அஞ்சா நெஞ்சினர் மரபு அன்றோ, இனி அவனியே, எதிர்த்தாலும் எனக்கென்ன அச்சம்

புதிய பகுதி

★ வரலாற்றுக் காதலோவியங்கள்

★ உளப்பண்பு விளக்கச் சம்பவங்கள்

★ அகத்துறைத் துணுக்குகள்

கொண்ட

அந்திக் கலம்பகம்

உங்கட்குக் கிடைக்க இருக்கும்

புதிய விருந்து

அடுத்த இதழில் பாருங்கள்.

என்றெல்லாம் எண்ணி இறுமாந்து கிடந்தேன்! ஆனால், ஐயோ! அயலவன் என்னை, ஆட்டிப்படைக்கிறான், அலங்கோலப் படுத்துகிறான், இம்சிக்கிறான், இழிவாக நடத்துகிறான், என் கூந்தலைப் பிடித்திழுத்து குற்றேவல் செய்யச் சொல்கிறான் — மகனே! எங்கே இருக்கிறாய்! என் இழிநிலை கண்டு, புலியெனச் சீறி எழுவாய், புல்லர் தம் ஆதிக்கத்தை அழித்தொழிப்பாய்! என் கண்ணீர் துடைப்பாய், கலி தீர்ப்பாய் என்றெல்லாம் எண்ணிக் கதறி நிற்கிறேன், உன்னைக் காணோமே, என்று பெற்றெடுத்த தாய் புலம்பும்போது, மகன், இழுக்கு நடைக்காரியுடன் வழுக்குப் பாறை வழியில் சென்றான் என்றால் எப்படி இருக்கும்!

வழுக்குப் பாறையில்தான் தம்பி இழுக்குடையாளின் பின்னே நாம் சென்று கொண்டிருந்தோம்.

திருஇடம் சீரழிக்கப்படுவதையும், பேரழிக்கப்படுவதையும், அடிமைப் படுத்தப்படுவதையும், அலங்கோலமாக்கப்படுவதையும் கண்டும் காணாதவர் போலாகி, ஆரியமெனும் இழுக்குடையாளுடன், வடவர் ஆட்சி எனும் வழுக்கு நிலத்திலேதான் நடந்து சென்று கொண்டிருந்தோம்.—நீண்ட நாட்களாக!!

நமது நிலையினை உணரவும் நமது தாயகத்துக்கு வந்துற்ற தாழ்நிலையினைத் தெரிந்துகொள்ளவும், எளிதில் நம்மால் முடியவில்லை.

நாம் யார் என்பதனையும், நமது நாடு எது என்பதனையும், நம் நாடு எந்நிலையில் இன்று உளது என்பதனையும், அதனை மாற்றித் திருஇடம் காணவேண்டும் என்பதனையும் உணர்ந்தோரின் அணிவகுப்பு காணத்தான் உன்னை அழைக்கிறேன்—உல்லாசம் காண அல்ல.

திருச்சிக்குத் தீரர்கள் அழைக்கப்படுகிறார்கள் — திருவாளர்கள் அல்ல! தோழர்கள் கூடுகிறார்கள், சீமான்களல்ல! வைரம் அல்ல காட்டச் சொல்வது, எஃகு உள்ளத்தை! மலர்த் தோட்டமல்ல, மாநாடு, மறவர் பாசறை! வெந்ததைத் தின்றுவிட்டு வேடிக்கைத் தெந்தினம் பாடிட அல்ல; வேதனைப் படுகுழியில் வீழ்ந்துள்ள தாயகத்தை மீட்கவும், அதற்காக வெந்தழல் மிக்கதோர் அகழியைக் கடந்தாக வேண்டுமென்ற நிலை இருப்பினும், துணிந்து இறங்கி, கருகி மாண்டவர்போக, மீதமுள்ளோர் முன்னேறிச் சென்று, தாயின் தளைகளை உடைத்தெறிந்து, அன்னையை அரியாசனம் ஏறச்செய்து, "நான் உனது மகனல்லனோ! நீ எனக்கு வாய்த்த தாய் அல்லவோ!" என்று தழதழத்த குரலிற் கேட்டு அன்னையின் அன்புக் கண்ணீரைக் காணிக்கையாகப் பெற்றுப் பெருமைப்பட, ஓர் பெரும்படை கூடுகிறது திருச்சியில், மே, 17, 18, 19, 20 — நாட்களில்—வீரம் அறிந்தவனே! வெற்றிபெற்றுத் தரத்தக்க தீரம் மிகுந்தவனே! களம் காணக் கலங்காத அடலேறே! என் அருமைத் தம்பி! வா! காண்போர் மனம் மகிழவும், காணாதார் மனம் ஏங்கவும், ஏறு நடையுடன் வா! என் அரும் திருநாடே! எல்லா வளங்கட்கும் உறைவிடமே! எவரையும் ஈர்க்கும் இயற்கை எழிலை ஏராளமாகப் பெற்ற என் பொன்னாடே! கெம்பீரத்தை விளக்குவது போன்ற மாமலை பலவும், மனக் குமுறலைக் காட்டிவிடுவது போலுள்ள பெருங் கடலும், உணர்ச்சி பீறிட்டு வருவதுபோல் ஆர்த்தெழும் ஆறுகள் பலவும் அழகழகாய்ப் பெற்றுள்ள செல்வத் திருநாடே! செந்தமிழ் தன்னையும் அதன் சேய்களாய் கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும் பெற்றெடுத்த பெருமைமிக்க நாடே! வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து புகழ் பெற்ற புலமைமிக்க நாடே! போர்க் கஞ்சாக் கொற்றவர்களையும், அவர் தம்கோலுக்கு அஞ்சாக்குடிமக்களையும், அவர்தம் ஏரடிக்கும் சிறு கோலுக்கு அஞ்சி, கேட்டதைத் தந்த செல்வியையும் பெற்றுச் சீருடன்விளங்கிப்பாராண்டநாடே! பண்பளிக்கும்பெட்டகமே! கலைக்கு ஓர் கருவூலமே! வீரம் விளைவிக்கும் பண்ணையே! மறக்குடி மகளிரின் மாண்பினை மாநிலம் கண்டு வியக்கத்தக்க அளவில் பெற்றிருந்த ஏற்றமிக்க நாடே! என் தாய்நாடே உன்னைவணங்குகிறேன் வாழ்த்துகிறேன்! வளம் தந்தாய் வாழ்வு தந்தாய் — இனி நான், உனக்கு வந்துற்ற இடரும் இழிவும் நீங்கிட, இன்னலை ஏற்க மட்டுமல்ல, இதோ இன்னுயிரை ஈந்திடவும் துணிந்து விட்டேன்! அந்த உறுதியைத்தான், இதோ அணி அணியாக வந்துகொண்டிருக்கும் என் உடன் பிறந்தார் காட்டுகின்றனர். அவர்களின் வாழ்த்தொலி, வஞ்சனையால் நம்மை வீழ்த்தி, சாகசத்தால் இன்னமும் நம்மைச் சாய்த்திட எண்ணும், மாற்றாரின் மனதிலே மருட்சியை மூட்டுகிறது, காணாய்! —என்று கூறிடுவாராய், என்று, உரிமையுடன் அழைக்கிறேன்.

வெட்டவெளியில் வேகவைக்கும் வெய்யிலைப் பொருட்படுத்தாது, கொட்டகை அமைக்கவும் கோலம் கிடைத்திடச் செய்யவும், திருச்சித் தோழர்கள் முயற்சி எடுத்துக் கொண்டுள்ளனர்.

முடிமன்னர்கள் கட்டிய மண்டிலங்களும் அவை தம் சிறப்பும் பிடிமண்ணாகிப்போன காதை அறிந்தும், இந்தப் பொடியன்கள், ஏதேதோ பேசுகின்றனர், போர் போர் என்று முழக்கமிடுகின்றனர், என்னே பேதைமை! என்று ஒரு புறம் ஆரியம் எள்ளி நகையாடுகிறது.

புண்யுதத்தின் பராக்கிரமம் அறியாத பதர்களே! பாரெங்கும் எமது பண்டிதருக்குப் பராக்குப்பாடிடும் போது, எங்கோ ஓர் மூலையில் நின்றுகொண்டு விடுதலை என்கிறீர்கள், கிளர்ச்சி என்கிறீர்கள்— பொலீஸ்பாயும், பட்டாளம் துரத்தும், சிறையில் தள்ளுவோம், தூக்குமரத்தில் ஏற்றுவோம், நாங்கள் துரைமார்கள் ஆகிவிட்ட சேதியை அறியீரா? — என்று ஆணவத்துடன்கேட்டு ஆர்ப்பரிக்கிறது, வடவராட்சி.

வகையற்றோரே! வாழவழி அறியாதாரே! வரட்டுத் தத்துவம் பேசுவோரே! பட்டமும் பதவியும், பவிசும் தரக் காங்கிரஸ், இட்டே நெருங்கி வருவோரை எல்லாம் அழைக்கிறது, குட்டம் கொண்டோனாயினும் பனிநீர் தெளித்து. பரிமளகந்தம்பூசி படுக்கை அலற அழைத்தேகும் பசிகொண்ட பாதகிபோல், கொள்ளை இலாபக் காரராயினும் கள்ளமார்க்கட்டுக் காரராயினும், மக்கட்கு மாபெருந் துரோகமிழைத்தோராயினும், ஊரை அடித்து உலையில்போடுவோராயினும், அனைவரையும் வரவேற்று உபசரித்து, உயர்வளிக்கக் காங்கிரஸ் சித்தமாக இருக்கும் போது, அதன் நிழலில் குளிர்ச்சியும், அதன் நேசத்தில் மலர்ச்சியும் கண்டுசுவைத்திடாமல், கொள்கை

வருந்துகிறோம்

செங்கற்பட்டு மாவட்ட தி.மு.க. பொருளாளர் உமையாபரணச்சேரி தோழர் ஓம். என் இராமலிங்கம் அவர்களின் துணைவியார் 1-4-56 அன்று இயற்கை எய்திய செய்தி அறிந்து மிகவும் வருந்துகிறோம். தோழருக்கு நமது ஆறுதல்.

என்றும் குறிக்கோள் என்றும் தாய்நாடு என்றும் தன்னரசு என்றும், திராவிடமென்றும் தன்மானமென்றும் ஒலி கிளப்பிக்கொண்டு ஒய்யார வாழ்க்கையைக் கெடுத்துக்கொள்கிறீர்களே! ஓட்டாண்டியாகாதீர்! பதவிபெறும் பாதையை விட்டுவிட்டு, சிறைக்கும் சித்திரவதைக்கும் அழைத்துச்செல்லும் பாதையில் ஏன் செல்லுகிறீர்கள்! எம்மைப்பார்த்து, பிழைக்கும் வழி அறிமின்! — என்று கூவிக் கூவி அழைக்கின்றனர்— கொள்கையை இழந்து, கோல்கொண்டோரின் கொடியைத் தூக்கிக்கொண்டு கூத்தடிக்கும் கோணங்கிகள்!

நானிருக்கப் போர் ஏன்? என்று தத்துவம் பேசுகிருர் காமராஜர்.

வயிற்றுப் பிழைப்புக்காரர்கள் —வஞ்சகர்கள்—போக்கிட மற்றவர்கள்—என்று ஏசுகின்றனர், நாம் உழைத்து உயர்வளித்த குடும்பத்தினர் எனத்தகும் திராவிட கழகத்தினர்.

இந்தச் சூழ்நிலையில், தம்பி! நாம் நமது குடும்பத்தின் முழு வலிவும் பூரணப் பொலிவும், திருச்சி மாநில மாநாட்டில் விளங்கிடும் வகையில் கூடிடவேண்டாமா!

களம் பல சென்று கடும்போரில் ஈடுபட்டுத் தியாகத் தழும்புகளை ஏற்றிருக்கிறோம்—தாயக மீட்புப் பணிக்காக நம்மை நாமே ஒப்படைத்துவிட்ட நிலையினராளுேம்.

பெற்ற தழும்புகளைக் கண்டு, பெருமிதம் அடைந்திடமட்டுமல்ல, இழித்தும் பழித்தும் பேசிடும் இயல்பினரை இனி நாம் பொருட்படுத்தப்போவதில்லை என்பதுபற்றிப் பேசிடமட்டுமல்ல, எதிர்ப்போர் ஏளனம் செய்வோர், ஆகியோரின் திட்டத்தைத் தகர்த்தெறிய வழிவகை காணமட்டுமல்ல, நமது 'வரலாறு'பற்றிய ஆய்வுரையை நாட்டினர் அறியச் செய்யமட்டுமல்ல, சீரிய நம் கொள்கை வெற்றிபெறத்தக்க செயல் திட்டம் காணக் கூடுகிறோம்! இதற்குச்சிந்தையில் உறுதிதான் சிறப்புறத் தேவையே தவிர, சிங்கார அமைப்புகளும் செல்வப் பெருக்கமும் அல்ல!

களம் செல்லத் துடிப்போருக்குக் கட்கம் முக்கியமே தவிர, கட்டில் தந்தத்தாலா தங்கத்தாலா, வட்டிலில் பாலா, தேனு, வனிதையின் மொழி, யாழா குழலா, என்பதல்ல முக்கியப் பிரச்சினைகள்.

வதைபடும் தாயகத்தைக் காண்கிறோம்—விடுதலைக்கான வழிவகை காணக் கூடுகிறோம்.

கஷ்டநஷ்டம் ஏற்கும் உள்ளம் படைத்தோர் கூடுகிறோம்.

நாவலர் நெடுஞ்செழியனை நம் கழகக் காவலராகக் கொண்டு கூடுகிறோம்.

நாவலர்—நம் கழகக் காவலர், தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள படை, ஒப்புயர்வற்றது, உளத்திண்மை கொண்டது, என்பதை உணரத்தக்க அளவிலும் வகையிலும், ஆற்றல் மிக்க தம்பி! உடன்பிறந்தோரை, உற்றுரை, உறவினரை! உளப்பண்பு மிக்கோரை, அனைவரையும் அழைத்துக் கொண்டு, வா! உன் ஆர்வம் கண்டு களித்திடவும், கண்ணெளி கண்டு மகிழ்ந்திடவும், துடிக்கிறேன். இன்னலும் இழிமொழியும், வன்கண்ணரின் வஞ்சகமும், என்னை வாட்டி வதைத்திடும் விதத்தில் ஏவப்படும் போதெல்லாம், நான் கலங்காது நின்று, என் சக்திக்கேற்ற அளவு கடமையைச் செய்வதற்குக் காரணம் என்ன தெரியுமா! **தம்பி உடையான் படைக்கு அஞ்சான்! அதனுல்!!**

அனைவருக்கும் கிடைக்கக்கூடிய வாய்ப்பா அது. ஆகவே தம்பி, காடுமலை வனம் குறுக்கே நின்றுலும், காதகரும் பாதகரும் தடைவிதித்தாலும், வேலை நெருக்கடி மிரட்டினுலும், பண நெருக்கடி பயமூட்டினுலும், விவரமறியாதார் குழப்பமூட்ட முயற்சித்தாலும், அதிகாரம் கொண்டோர் அடக்கிட முனைந்தாலும், எதற்கும் சளைக்காமல் கிடைக்கும் வசதிகளைத் திரட்டிக்கொண்டு, வசதி கிடைக்காவிட்டால், ஓர் புனிதப் பயணத்தில் ஈடுபட்டிருக்கிறோம் என்ற உறுதியைத் துணைகொண்டு, புறப்படு, திருச்சி நோக்கி!

உன் எழுச்சி, நாடெங்கும் எதிரொலிக்கட்டும்.

உன் முழக்கம், மாநிலமெங்கும் கேட்கட்டும்.

உன் பரணி, நாம் முன்னம் தரணி ஆண்டோர் என்பதை அனைவருக்கும் அறிவிக்கட்டும்.

குன்றுகளிலும்,சிற்றூர்களிலும் வயலோரங்களிலும் ஆலைகளிலும் பள்ளிகளிலும் பணிமனைகளிலும், பட்டினங்களிலும் அங்காடிகளிலும், பண்புள்ளோர் காணப்படும் எல்லா இடங்களிலும், இன்றிருந்து, தம்பி, எடுத்துக் கூறு, திருச்சி தீரரை அழைக்கிறது,

மே 17, 18, 19, 20 நாட்களில் என்பதை-

தேனென இனிக்கும் சேதி என்பர் திராவிடர்; பிறர்க்கு தேட்கடி போல் தோன்றும், இச்சேதி.

புதியதோர் அரசு காணப் புறப்படுவோம், புல்லர் தம் புரட்டாட்சி ஒழித்திடப் போரிடுவோம்,

திரு இடம் காண்பதற்கே திரண்டிடுவோம், தீரரெலாம் திருச்சி மாநகரில்தானே!!

அன்பன்

அண்ணுத்துரை.

திருமண அழைப்பு

பேரன்புடையீர்,

வணக்கம், 15—4—1956 ஞாயிறு காலை 9-மணிக்கு சென்னை வண்ணையம்பதி தியாகராயர் கல்லூரி கலா மண்டபத்தில், எங்கள் செல்வி இராணிக்கும், திரு. ஞாயிறு ராசா அவர்களின் செல்வன் கலைச்செழியனுக்கும் திருமணம் நடைபெறும். அண்ணு தலைமை வகித்து நடத்தி வைப்பார்கள். நண்பர்கள் பலர் வாழ்த்துரை வழங்குவர். தாங்கள் வருகை தந்து மண விழாவினைச் சிறப்பிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இங்ஙனம்,
என். வி. நடராசன்,—புவனேசுவரி.

தென்னாட்டு இரப்பர்

சிங்கப்பூரிலே குண்டு விழுந்தது. பினாங்கிலே ஜப்பான் நாட்டு விமானங்கள் வட்டமிட ஆரம்பித்தன. "இங்கிலாந்தின் முதுகெலும்பு" என்று புகழப்பட்ட உலகத்திலேயே பெரிய இரும்புக் கப்பல் ஜப்பான் குண்டு வீச்சால் ஒரு நொடியில் மூழ்கியது. மலேயா ஜப்பானியர் பிடியிலே மாட்டிக்கொண்டது.

மலேயா — நேச நாடுகளின் உயிர், முக்கியமான போர்க்களம். அதன் வீழ்ச்சிக்குப் பிறகு, நேச நாடுகளுக்கு ஒரு முக்கியமான இழப்பு, ஈடு செய்ய முடியாத ஒரு தேவை ஏற்பட்டது. இதை எப்படிச் சரிக்கட்டுவது என்ற எண்ணம், ஆராய்ச்சி அவர்களின் பெரியதோர் பிரச்சினையாக ஆகிவிட்டது.

மலேயா — உலக இரப்பர் உற்பத்தியில் 90 சதவீதத்தை உற்பத்தி செய்யும் நாடு. மோட்டார் கார்கள், ஆகாய விமானங்கள், சைக்கிள்கள் முதலியவற்றிற்கு வேண்டிய டயர்கள் செய்ய ஏராளமான இரப்பரை, அந்த மிக நெருக்கடியான போர்க் காலத்திலே,நேச நாடுகள், மலேயாவிடம் பெற்று வந்தன. அந்த மலேயா வீழ்ந்துவிட்டது. இரப்பர் கிடைப்பதும் நின்றுவிட்டது!

இரப்பர் இன்றி கார் ஓட்டுவது எப்படி? காரும் விமானமும் இன்றிப் போர் செய்வதெப்படி? எனவே அமெரிக்காவும் பிரிட்டனும் இரப்பர் தரும்படி இந்தியாவை நோக்கின. இந்தியா கல்கத்தாவையும், பம்பாயையும் நோக்கிற்று! பம்பாயும் கல்கத்தாவும் திராவிடத்தை நோக்கின!

திராவிடத்தின் இரப்பர் பம்பாய்க்கும் கல்கத்தாவுக்கும் சென்றது. அங்கே டயராக, பொருள்களாக மாற்றப்பட்டது. போர்க்களங்களுக்கு அனுப்பப்பட்டது. போர்க்களத்திலே குண்டு வீசிக்கொண்டிருந்த விமானங்களின் சக்கரங்களிலும், மோட்டார்களின், டாங்குகளின் சக்கரங்களிலும் திராவிடத்தின் இரப்பர் காட்சியளித்துக்கொண்டிருந்தது!

இரண்டாம் உலகப் பெரும் போரின்போது, நடந்த நிகழ்ச்சிகளில் ஒன்றுதான் இதுவும். ஆஸ்டினிலும், மாரிஸ் மைனரிலும், 'ப்யூக்'கிலும் வாக்சாலிலும் அமர்ந்து, மணிக்கு அறுபது மைல் போட்டி போட்டுப் போகின்ற 'மேதை'கள் பலருக்குக்கூட, தங்கள் காரின் டயர் எங்கே செய்தது. எங்கிருந்து கிடைத்தது என்பது தெரிந்திருக்காது. உண்மையிலேயே பம்பாயிலும், கல்கத்தாவிலும் செய்யப்படும் அந்த டயர்கள், திராவிடத்தின் இரப்பரினால் செய்யப்படுபவைதான் என்ற உண்மையை அவர்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

திராவிடத்தின் இரப்பரைப்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமா? நீலகிரிக்குச் செல்லுங்கள். அங்கே பல இரப்பர்த் தோட்டங்கள் 340 ஏக்கரிலே இருப்பதைக் காணலாம். முழுவதும்காணவேண்டுமா? வளம் கொழிக்கும் மேற்குக் கடற்கரைக்குச் செல்லுங்கள். அரபிக்கடலின் அலைகளால் தாலாட்டப்பட்டு அழகுற விளங்கும் அந்தக் கரையை ஒட்டி, அதன் அருகே வானமளாவி நிற்கும் மேற்கு மலைத்தொடரின் சரிவுகளின் பக்கத்திலே, தெற்கு வடக்காக சுமார் 400மைல் தூரம் பிரயாணம் செய்யுங்கள். காடுகளுக்கு மத்தியிலும், குன்றுகளுக்கு இடையிலும், சமவெளிகளின் நடுவிலும், சிற்றூர்களின் அருகிலும் சிங்காரமான இரப்பர்த் தோட்டங்களை, இடை இடையே ஏராளமாகக் காண்பீர்கள்!

திராவிடத்திற்கு எப்படி வந்தது இரப்பர்? 1876 ஆண்டுக்கு முன்னால் அமெரிக்காவிலிருந்து, அமெரிக்கர் சிலர் அடங்கிய குழு ஒன்று அரபிக்கடலிலே வந்து இறங்கியது. அவர்களில் பலர் நல்ல மாலுமிகள். ஊக்கமும் உற்சாகமும் உடையவர்கள். திராவிடத்தின் மேற்குக் கடற்கரையிலே வந்து அவர்கள் இறங்கினார்கள். நிலப்பகுதியிலே நுழைந்தார்கள். பெரிய காடுகளை, குன்றுகளைக் கண்டார்கள். அந்தக் காடுகளிலே சீறும் சிறுத்தைகளை, பாயும் புலிகளை, பிளிறும் யானைகளைக் கண்டார்கள்!

பயங்கரமான இடங்கள்தான். எனினும் பதறாது ஆராய்ச்சி செய்தார்கள். அவர்களை இங்கே அனுப்பி வைத்தவர் ஹென்றிவிக்கன் என்ற அமெரிக்கர், கூடவே ஒரு பெட்டியையும் அவர்களிடம் கொடுத்தனுப்பியிருந்தார்.

வந்தவர்கள் விலங்குகளோடும், விஷப் பூச்சிகளோடும் போராடிக்கொண்டே காடுகளை அழித்தார்கள். மேடுகளைச் சமப்படுத்தினார்கள். கொண்டு வந்திருந்த பெட்டியைத் திறந்தார்கள். இரப்பர் விதைகளை இங்கெல்லாம் பயிரிட்டார்கள்! விரைவில் பெரிய பெரிய இரப்பர்த் தோட்டங்களை பல இடங்களில் அமைத்துவிட்டார்கள். இரப்பர் உற்பத்தி திராவிடத்தில் தொடங்கியது. இந்தியாவின் ஸ்டேட் செயலாளராக இருந்த சாலிஸ்பரி பிரபுவும் இதற்கு ஓரளவு பொறுப்பாளி.

இந்தியாவில் முதன் முதல் இரப்பர் பயிரான இடம் இதுதான். இன்று இந்தியாவுக்கு தேவைப்படும் இரப்பரில் மிகப் பெரும் பகுதியை உற்பத்தி செய்வதும் நமது வளமிக்க திருவிடம்தான்!!

—தொண்டைமான்

"அப்பப்ப! சோற்றுக்கும் துணிக்கும் திண்டாடித் தெருவில் நிற்பதைவிட எப்படியாவது சிறைச்சாலைக்குப் போய் விட்டால், போதும்," என்று எண்ணினன் ஒரு ஏழை. அங்கு, இவைகளுக்காக அவதிப்பட வேண்டிய அவசியமில்லையல்லவா, அதனால். ஆனல், எப்படிச் சிறைக்குப் போவது? அதற்காக, ஒரு ஓட்டலுக்குப் போய் வயிறு புடைக்கத் தின்றுவிட்டு காசு கொடுக்காமல் வெளியே வந்தான்—யாரும் அவனைப் பிடிக்கவில்லை. இதென்னடா, பெரிய தொல்லையாயிருக்கிறதே என்றெண்ணியவனாக ஒருவர் வைத்திருந்த குடையைப் போய்த் திருடினன்! அப்படியும் அவனுக்குச் சிறைக்குச் செல்லும் 'பாக்கியம்' கிட்டவில்லை. சலித்துப்போனவனாக, ஒரு வீட்டின் கண்ணாடி சன்னலைப்போய் உடைத்தான். சந்தர்ப்பம், அங்கும் அவனுக்கெதிராகச் சதி செய்தது! கடைசியில், வீதியில் போய்க்கொண்டிருந்த ஒரு பெண்ணின் கைகளைப் போய்ப் பற்றினன். அப்படியும் அவன் இலட்சியம் நிறைவேறவில்லை! இதற்குமேல், அவனல், எதுவும் செய்யமுடியவில்லை. ஆதலால், மனம் சோர்ந்தவனாக, வேறு என்ன செய்தால் ஜெயிலுக்குப் போக முடியும் என்று யோசித்தபடி ஒரு மாதா கோவிலில் போய் அமர்ந்தான். அங்கிருந்த பாதிரியார் ஒருவர் செய்த போதனைகள் அவன் மனதைத் திருப்பின. எப்பாடு பட்டாலும் தீய வழிகளில் செல்லாமல் மனிதன் வாழ முயற்சிக்கவேண்டும் என்பதுதான் அவருடைய போதனை! அதைக்கேட்ட அவன், ''சரி! எவ்வளவு துயரங்கள் வந்தாலும் சரி, இப்படி தவருன வழிகளில் செல்லக்கூடாது, நாமும் நல்லவன் என்று பெயரெடுத்து வாழவேண்டும்,'' என்கிற முடிவுக்கு வந்தான். நல்வழிக்குச் செல்ல முடிவு செய்தவண்ணம் மாதாகோவிலை விட்டு அவன் கிளம்பியபோது போலீஸ்காரர்கள் வந்து, 'ஊர்சுற்றி, ஓடுகாலி, உன் மீது எங்களுக்குச் சந்தேகமாயிருக்கிறது' என்று சொல்லி அவனைக் கைது செய்தனர்!!

*

சிந்தனையைக் கிளறும் இதுபோன்ற சிறுகதைகளைத் தீட்டினன், அவன். உலகமே, அவனை இன்று போற்றுகிறது! ஆங்கிலத்தினின்றும் அவனுடைய கதைகள் பல மொழிகளில் பெயர்க்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு கதையிலும் முடிவு சற்றும் எதிர்பாராததாயிருக்கும்! அநேகமாக அவன் கதைகளிலெல்லாம் ஏழ்மையின் கொடுமைகளும், வாழ்க்கையில் ஏற்படும் மின்னல்களுமே இடம்பெற்றிருக்கும். ஏனெனில், எழுத்தாளன் ஆகுமுன்பு, அவன் அவ்வளவு அனுபவங்களைப் பெற்றிருக்கிறன் வாழ்க்கையில்! அனுபவம் அருமையான ஆசானல்லவா?

உலகமே புகழும் சிறுகதைகளைத் தீட்டிக் குவித்த அவன், இலக்கியங்களைக் கரைத்துக் குடித்தவனல்ல. உயர்நிலைப் பள்ளிக்குக்கூடப் போனது கிடையாது! ஆனல், இன்று அவனைப் பேராசிரியர்களும், எழுத்தாளர்களும், போற்றிப் புகழ்கின்றனர். ஆட்டுப் பண்ணையைக் காவல் காப்பவனாகத்தான் இருந்தான் ஆரம்பத்தில்! இன்று அமெரிக்காவிலுள்ள டெக்ஸாஸ் எனுமிடத்திலுள்ள அந்தப் பண்ணையைப்போய்ப் பார்க்க, வாராவாரம் ஏராளமான யாத்திரிகர்கள் போகிறார்கள்!! அவன் எங்கெங்கு ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தானே, அந்த இடத்தைப் போய்ப் பார்த்துவிட்டு வருவதைப் பெருமையாகக் கருதுகிறார்கள்.

இப்படிப்பட்ட இவனை 'முழு சிந்தனைச் சிற்பி' யாக்கியது சிறைச்சாலைதான். ஒரு பாங்கியில், பொறுப்பான உத்தியோகம் கிடைத்து, வகித்துவந்த போது ஏற்பட்ட தவறுக்காக இவனைச் சிறையிலே கொண்டுபோய் அடைத்தனர். அங்குதான் இவன் உலகம் வியக்கும் கதைகளுக்கு உருவம் கொடுக்கலானன்! அவனைப் பிறிதொரு சமயம் பேட்டி கண்டு ஒருவர் பேசியபோது தெரிவித்தானும், "சிறைச்சாலைக்குப் போயிரா விட்டால் நான் இவ்வளவு பெரிய எழுத்தாளனகவே ஆகியிருக்க முடியாது. வாழ்க்கையில் நான் கண்ட அனுபவங்களைப்பற்றி எண்ண எண்ண ஏதேதோ கற்பனைகள் உருவாயின. உடனே, அவைகளை எழுதலானேன். அங்கு போயிராவிட்டால் இந்தச் சந்தர்ப்பம் எப்படி ஏற்பட்டிருக்கப் போகிறது'', என்பதாக.

உண்மையுங் கூடத்தான்! அவனைப் போல, பல அறிஞர்களுக்குச் சிறைச்சாலைக்குச்செல்லும் வாய்ப்பு மட்டும் கிடைத்திராமலிருந்தால் பல அரிய நூல் களஞ்சியங்களை நாம் பெற்றிருக்க முடியாது. ஜான் புன்யனை, அவனுடைய மத போதனைகளுக்காக பன்னிரெண்டு ஆண்டுகள் சிறையில் அடைக்காமலிருந்தால், உலகம் போற்றும் "Pilgrims Progress", எனும் நூல் கிடைத்திருக்க முடியாது. செர்வென்டிஸ், சிறந்த நூலான "Don Quixote"ஐ எழுதியது சிறையில்தான். வால்டேரின் எண்ணங்கள் எழுச்சி பெற்றதும், ஆங்கில எழுத்தாளன் ஆஸ்கார் ஒயில்டின் அரிய ஓவியங்கள் உருப்பெற்றதும், சிறையில்தான். "மெயின்காம்ப்", எழுத இட்லருக்கு சந்தர்ப்பம் கிடைத்ததுகூடச் சிறையில் தானும்! இன்று ஒப்பற்ற உலகச் சரிதம் என்று மாணவர் படிக்கும் நூல் சிறைக்கு அனுப்பப்பட்டிராவிடில் ஆங்கிலப் பேரறிஞன் சர் வால்டர்ராலே எழுதியிருக்கவே மாட்டான்.

இந்த விபரங்களைக் காணும்போது, நல்ல நூல் எழுத ஆசைப்பட்டால் நாமும் சிறைக்குத்தான் போக வேண்டும் என்று தோன்றுகிறதா, உங்களுக்கு!!

சொல்ல மறந்துவிட்டேனே, படத்தில் தென்படும் ஒப்பற்ற சிறுகதை மன்னன்தான், சிறையால் மனிதனன ஒ. ஹென்றி.

"வண்டு"

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.